பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 வைகாசி 02 செவ்வாய்க்கிழமை (16.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :170

# தீவுப் பகுதி படுகொலைகள் குறித்து மக்கள் சுதந்திரமாக சாட்சியமளிக்க அஞ்சும் நிலை

## ஊர்காவற்றுறை நீதிவான் விசனம்

யாழ்ப்பாணம், மே 16

அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் பகுதிகளில் கடந்த சனி இரவு அப்பாவிப் பொதுமக்கள் 13 பேர் கொடூரமாகச் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பற்றிய மரண விசாரணையில் அப்பகுதி மக்கள் சுதந்திரமாக சாட்சியமளிக்கக் கூடிய நிலைமை அறவே இல்லை.

- இவ்வாறு விசனம் தெரிவித்திருக்கின்றார் இந்த மரணங்கள் குறித்து மரண விசாரணை நடத்த வேண்டிய ஊர்காவற்றுறை நீதிவான் ஜெயராமன் ரொக்ஸி.

சிரேஷ்ட பொலீஸ் அதிகாரிகள், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள், செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்றை அமைத்து அவர்களின் முன்னிலையில் மக்கள் சுதந்திரமான முறையில் சாட்சியம் அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இவ்விவகாரம் குறித்துப் பேசுவதற்காக பொலீஸ்மா அதிபருடன் அவர் தொடர்பை ஏற்படுத்த முயற்சித்தபோதும், பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கிடைக்காததால், சிரேஷ்ட பிரதி பொலீஸ்மா அதிபர் எஸ்.பாலசூரியவிடம் இக்கோரிக்கையை அவர் விடுத்தார் எனத் தெரிகின்றது.

படுகொலைகள் இடம்பெற்ற பிரதேசத்தின் கடற்படையினர் அங்கு பிரசன்னமாக இருப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கரவெட்டியில் குண்டுவெடிப்பு; சேதம் இல்லை

கரவெட்டி,மே 16

வடமராட்சி மூத்தவிநாயகர் கோயிலடியில் நேற்றுக்காலை குண்டொன்று வெடித்தது. சேதம் ஏதும் ஏற்பட வில்லை.

காலை 8.45 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு அண்மையில், பருத்தித்துறை பிரதான வீதியில் இந்தக் குண்டு வெடித்தது. சம்பவம் இடம்பெற்ற இடத்தில் வழமையாக இராணுவத்தினர் கூடி இருப்பது வழமை என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தினரை இலக்கு வைத்தே

(08ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதியில் கிளைமோர்த் தாக்கு; இருவர் படுகாயம்!

புளியங்குளம், மே 16

வவுனியா விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணி நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

சேமமடு பகுதியில் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் டிராக்டரில் சென்ற இளைஞர்களே சிக்கினர்.

தாக்குதலில் பஞ்சலிங்கம் தயாபரன், கந்தசாமி சரா ஆகிய இருவரும் காயமடைந்தனர் என்றும், இவர்களில் கந்தசாமி என்பவர் ஆபத்தான நிலையில் இருந்தார் எனவும் கிளிநொச்சி தகவல்கள் தெரிவித்தன. (க-355)

## நிலாவரையில் சம்பவம்

# கடையில் படுத்திருந்த இருவரை இரவோடு இரவாகக் காணோம்

### தரையில் இரத்தக் கறை

யாழ்ப்பாணம்,மே16

புத்தூர் தெற்கு, நிலாவரைப் பகுதியில் கடையொன்றில் படுத்திருந்தவர்த்தகர்களான இரு இளைஞர்கள் நேற்றுமுன்தினம் இரவு திடீரென மர்மமான முறையில் காணாமல் போயுள்ளனர். அவர்கள் இருந்த இடத்தில் இரத்த வெள்ளம் காணப்படுகின்றது.

காணாமற்போன இருவரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் காரணமாக அப்பிரதேசம் பீதியில் உறைந்து போயுள்ளது.

குடாநாட்டில் அண்மைக் காலத்தில் இளைஞர்கள் இவ்வாறு மர்மமாகக் காணமற் போவதும் அவர்கள் இருந்த இடத்தில் இரத்தக் கறை காணப்படுவதுமான இரண்டாவது சம்பவம் இதுவாகும். ஏற்கனவே வரணிப் பகுதியில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று மாலை பரவலாக கிரனேட் வீச்சுகள்!

யாழ்ப்பாணம்,மே16

குடாநாட்டில் நேற்று மாலை 6 மணியளவில் ஒரே நேரத்தில் பல இடங்களில் கிரனேட் தாக்குதல்கள் இடம்பெற்றன.

ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்குவைத்து இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கல்வியங்காடு, குளப்பிட்டி, சுதுமலை, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளிலேயே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தாக்குதல்களைத் தொடர்ந்து படையினர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த னர் என்று கூறப்படுகிறது. இந்தச் சம்பவங்களின் சேதவிவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை. (7-185)(22)

## கிளிநொச்சியில் இன்று பேரணி

வடக்கு - கிழக்கில் இடம்பெறும் அரச பயங்கரவாதச் செயல்களை சர்வதேச சமூகம் கண்டிக்கத் தவறியதற்கு ஆட்சேபம் தெரிவித்து கிளிநொச்சி நகரில் இன்று கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

இதற்கான அழைப்பினை கிளிநொச்சி மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்துள்ளது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் ஒன்றுகூடும் மக்கள் அங்கிருந்து காலை 10 மணிக்கு பேரணியாகச் செல்வார்கள். அவர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினர் ஆகியோரிடம் மகஜர்களைக் கையளிப்பர். (7)(22)

# இணைத் தலைமையோடு இந்தியா சேர்ந்து இயங்கும் திட்டம் இல்லை

கொழும்பு,மே16

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளுடன் இணைந்து இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளில் தீவிரமான பங்களிப்பை இந்தியா வழங்கும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன என 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் சமாதானத்துக்கான ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூசி அகாஷி, இணைத் த்லைமை நாடுகளுடன் இந்தியாவும் இணைய வேண்டும் என்று ஒருபோதும் இந்தியாவைக் கேட்கவில்லை. மாறாக இணைத் தலைமை நாடுகளின் சமாதானப் பணிகளுக்கு சௌகரியப்பட்ட விதத்தில் இந்தியா உதவ முன்வரவேண்டும் என்று மட்டுமே இந்தியாவைக் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்றும் பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவித்திருக்கிறது.

கடந்த வாரம் புதுடில்லி சென்றிருந்த ஜப்பானிய சிறப்புத் தூதுவர் அகாஷி, இந்தியத் தலைவர்களைச் சந்தித்து இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்துப் பேசியிருந்தார்.

''இணைத் தலைமை நாடுகளுடன் இணைந்து கொள்ளுமாறு இந்தியாவை நாங்கள் கேட்டிருக்கிறோம். அதற்கு இந்தியா காட்டியுள்ள அறிகுறி ஆக்கபூர்வமாக இருந்தது.'' - என்றும் ஜப்பானிய சிறப்புத் தூதுவர் புதுடில்லிக்கு செல்லு முன் கொழும்பில் வைத்து ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்திருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(08ஆம் பக்சம் பார்க்க)

# இராணுவத்தால் தாக்கப்பட்டதில் ஒரே குடும்பத்தவர் அறுவர் காயம்

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் கடும் அடிகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு தமது வீடுகளுக்குள் புகுந்த இராணுவத்தினரே தம்மைத் தாக்கிப் படுகாயப்படுத்தினர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

மீசாலை மேற்கு, கேணியடியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இரவு 9.00 மணியளவில் கந்தையா ஜெயகுமாரலிங்கம் என்பவரின் வீட்டின் கதவுகளை உடைத்துப் புகுந்த படையினர் குறித்த ஒருவரின் பெயரைக் கூறி, அவரைத் தெரியுமா என்று கேட்டுத் தாக்கியுள்ளனர்.

இதில், குடும்பத் தலைவரான கந்தையா ஜெயகுமாரலிங்கம் (வயது 59), அவரது மனைவியான தெய்வநாயகி (வயது 58), அவர்களது மகள்களான நாவற்குழி ப.நோ.கூ.சங்க ஊழியர் ரட்ணலோஜினி (வயது 33), யாழ்.செயலக ஊழியர் உமாதேவி (வயது 31), சாவகச்சேரி கல்வி வலய ஊழியரான செல்வரதி (வயது 28), யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீட 3ஆம் வருட மாணவியான விஜயகலா (வயது 22) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-14-15-86-190)

# இராணுவத் தளபதி கடமைக்கு 3 வாரங்களில் திரும்புவாராம்!

## மருத்துவமனையில் அவரே தகவல்



கொழும்பு,மே16

கடந்த மாதம் கொழும்பில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் காயமடைந்த இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா, மீண்டும் வெகுவிரைவில் தாம் கடமைக் குத் திரும்புவார் என உறுதியாகக் கூறியிருக்கிறார்.

இராணுவ வைத்தியசாலையிலிருந்து நேற்று வெளிநாட்டுச் செய்தித் தாபனமொன்றுக்குப் பேட்டியளித்த இராணுவத் தளபதி, மூன்று வாரங்களுக்குள் தாம் கடமைக்குத் திரும்பவுள்ளார் எனவும், எதுவித ஊனங்களுமின்றி தமது உடல் கிரமமாக இயங்குவ தாகவும் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

சம்பவ தினம் பகலுணவுக்காக நான் சென்றுகொண்டிருக்கும் போது தற்கொலைக் குண்டுதாரி எனது வாகனத்தின் முன்னால் பாய்ந்தார். எனது பாதுகாப்பு உத்தியோகத்தரில் ஒருவர் குண்டுதாரியை எட்டி உதைத்ததைக் கண்டேன். குண்டுதாரி

(08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

## அரச பயங்கரவாதத்துக்கு சர்வதேச சமூகமே பொறுப்பு

விரக்தியின் விளிம்பில் நிற்கும் ஒட்டுப்படைகளும் அவற்றை இயக்கும் அரச புலனாய்வுப் பிரிவுகளும், அரச படைகளும் தமது ஆக்கிரமிப்பில் இருக்கும் தமிழர் தாயகத்தில் தங்களின் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டன. 'வேலியே பயிரை மேயும்' கொடூரக் கொலை வெறியாட்டம் வடக்கில் அரங்கேறத் தொடங்கி விட்டது.

இரு பிஞ்சுக் குழந்தைகள் உட்பட ஒரு டசினுக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் யாழ். தீவகத்தில் நித்திரைப் படுக்கையில் வைத்துக் கோரமாகச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

வழக்கம்போல இந்தக் கொடூரக் கொலைகளுக்கான பொறுப்பை புலிகள் மீது சுமத்தி, படைத்தரப்பின் அட்டூழியத்தை மூடி மறைக்க முயன்றிருக்கிறது தென்னிலங்கைச் சிங்கள அரசுத் தலைமை.

புதிய ஜனாதிபதி மஹிந்தர் ஆட்சிப் பீடம் ஏறிய பின்னர், அவரது அரசின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட தமிழர் தாயகப் பிரதேசத்தில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை வெறியாட்டம் - கட்டுமட்டின்றி - தறிகெட்டு - தலைவிரித்தாடுகின்றது.

திருகோணமலை நகரில் ஐந்து அப்பாவி மாணவர்கள் துப்பாக்கி முனையில் வைத்துக் கொடூரமாகச் சுட்டுக் கொல்லப்பட்டமை முதல் தற்போதைய தீவுப்பகுதிக் கொடூரங்கள் வரை விரிவடைந்து, தீவிரமடைந்து வரும் இந்தக் கொலை வெறியாட்டத்தை நோக்குகின்ற போது ஒரு விடயம் தெரிய வருகின்றது.

இந்தக் கொடூரங்களில் கொல்லப்பட்டவர்களைப் புலிகளாகச் சித்திரிப்பதன் மூலமோ அல்லது கொலையாளிகள் புலிகளே என்று கதை கட்டுவதன் மூலமோ இக்கொலைகளுக்குக் காரணமான அரச படைகளையும், ஒட்டுப்படைகளையும் கொடூர கொலைக் குற்றங்களில் இருந்து கவனமாகப் பாதுகாத்து வருகின்றது தென்னிலங்கை அரசுத் தலைமை. இக்கொலையாளிகள் விடயத்தில், அரச படை ரீதியான - நீதியான - நடவடிக்கை எதனையும் எடுக்கத் தவறியதன் மூலம் - ஆகக் குறைந்த பட்சம், கொலைச் சந்தேகநபர்களாகவும், பொறுப்பாளர்களாகவும் இருக்கின்ற படை அதிகாரிகளுக்கு எதிராக இடமாற்ற உத்தரவு தன்னும் வழங்காமல் இருப்பதன் மூலம் - அரச பயங்கரவாதத்தை அரசுத் தலைமை ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி, வளர்த்து வருகின்றது என்பதே நிஜம்.

படைத்தரப்பினால் புரியப்படும் இத்தகைய சட்ட விரோதப் படுகொலைகள் இலங்கைத் தீவில் மோசமடைந்து வருவதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும், சர்வதேச சமூகமும் கூடப் பொறுப்பேற்க வேண்டும்.

அரசுப் படைகளின் சட்ட விரோதப் படுகொலைகளை துணிச்சலுடன் அம்பலப்படுத்த முயன்ற கண்காணிப்புக் குழுவின் தற்போதைய தலைமை, அத்தகைய முயற்சிக்கு எதிராகத் தென்னிலங்கைச் சிங்கள அரசு சீறியதும் துணிச்சல் துவண்டு, அடங்கிப் போய் விட்டது. அரசுப் படைகளின் அட்டூழியங்களை - அப்பாவி மக்களைப் படுகொலை செய்யும் வெறியாட்டத்தை - கண்டும் காணாமலும் ஒதுங்கிப் போய் நிற்கின்றது அது.

விடுதலைப் புலிகள் நடத்தியவை என்று கூறப்படும் வன்முறைகள், தாக்குதல்கள் என்றால் விழுந்தடித்து, வரிந்து கட்டிக் கொண்டு போய் அறிக்கைகளை வெளியிடும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு -

சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல், கடல் பயன்பாட்டு உரிமை ஆகியவை குறித்தெல்லாம் யுத்த நிறுத்த உடன்பாட்டில் எதுவுமே குறிப்பிடப்படாமல் இருக்க, அவை தொடர்பாகக் கற்பனையில் தான் ஒரு தீர்மானத்தை எடுத்துக் கொண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்த நிறுத்த மீறல் குற்றச்சாட்டு அறிக்கைகளை வாரிவழங்கி வெளியிடும் கண்காணிப்புக் குழுவுக்கு -

அரசுப் படைகள் மற்றும் ஒட்டுப்படைகளின் இத்தகைய கொலை வெறித் தாக்குதல்கள் மட்டும் பெரும்பாலும் கண்ணில் படுவதேயில்லை.

இத்தகைய மிக மோசமான - சகிக்க முடியாத - கொடூரக் கொலைகள் விடயத்தில் திட்டவட்டமான, தெளிவான அறிக்கைகளையும், உண்மையை அம்பலப்படுத்தும் அறிவிப்புகளையும் வெளியிடாமல் கண்காணிப்புக் குழு மௌனம் சாதிப்பதன் மூலம், இத்தகைய கொடூரங்களை ஊக்குவித்துப் பேணும் பெரும் தவறை - குற்றத்தை - அது புரியாமல் புரிகின்றது என்பது கவனிக்கத்தக்கது.

விடுதலைப் புலிகள் 'பயங்கரவாதிகள்' என்றும், தமது பயங்கரவாதப் போராட்டத்துக்கு அச்சுறுத்திப் பணம் பறிக்கின்றார்கள் என்றும் குற்றம் சுமத்தி, புலிகளைத் தத்தமது நாடுகளில் தடை செய்த கனடா, அமெரிக்கா போன்ற சர்வதேச நாடுகளும் கூடப் பிஞ்சுகளைப் படுகொலை செய்யும் இத்தகைய 'அரச பயங்கரவாதத்தை' பார்த்துக் கொண்டு வாளாவிருப்பது விநோதமானது.

இத்தகைய கொடூரங்களைப் புரியும் அரசுப் படைகளையும், அரசுப் பயங்கரவாதத்துக்கு அங்கீகாரமும், அனுமதியும் அளித்திருக்கும் தென்னிலங்கை அரசுத் தலைமையையும் நோவதற்கு முன்னர், இது விடயத்தில் தமது பொறுப்புத் துறந்து செயற்படும் கண்காணிப்புக் குழுவையும், சர்வதேச சமூகத்தையும்தான் நொந்து, வைய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் ஈழத் தமிழர்கள்.

கௌரவமான வாழ்வுக்கும், நியாயமான மனித உரிமைகளுக்கும், நீதியான சுதந்திரத்துக்குமாகப் போராடும் விடுதலைப் புலிகளையும் அவர்களது போராட்டத்தையும் 'பயங்கரவாதிகள்' எனவும் 'பயங்கரவாதம்' எனவும் சித்திரித்துக் கொண்டு, அரச பயங்கரவாதத்தைக் கண்டும் காணாமலும் விட்டு, அதன் மூலம் அந்தப் போக்கை ஊக்குவிக்கும் சர்வதேசம் குறித்துத் தமிழர்கள் பெரும் விசனம் கொள்கின்றார்கள்.

'ஒரு கண்ணில் சுண்ணாம்பும் மறு கண்ணில் வெண்ணெய்யும் தடவும்' இந்த நீதியற்ற போக்கிலிருந்து சர்வதேச சமூகம் தன்னை விடுவித்துக் கொண்டால்தான் அரச பயங்கரவாதப்பிடியிலிருந்து தப்பிப் பிழைக்கும் நியாயம் தமிழருக்குக் கிட்டும்.

இலங்கை விவகாரத்தில் இனிமேலாவது நியாயமாக - நீதியாக - பக்கச் சார்பின்றி - பொறுப்புடன் - நடக்குமா சர்வதேச சமூகம்? தமிழர்கள் அனைவரினதும் மனதில் எழும் கேள்வி இதுதான்.

# குருதியில் குளிப்பது எங்களின் விதியா? உலகமே! இதற்கும் மௌனம்தான் பதிலா?

இது
புத்தர்பெருமான் ஞானம்பெற்ற
சித்திரைநாளின் சிறப்புப் பரிசு.
பாவப்பட்ட ஈழத்தமிழருக்கு
பௌத்ததேசம் வழங்கிய விருது.
அன்று
விகாரைகள் தோறும் விளக்குகள் ஒளிர்ந்தன
எங்கள் ஊர்களில் உயிர்கள் அணைந்தன.
பாருங்கள்
எல்லோரும் உற்றுப் பாருங்கள்.
ஈரம் நொதிக்கும் இதயங்களே!
தீர்ப்பு வழங்கவரும் தேசங்களே!
எங்கள் வாழ்வின் அவலத்தை வரைந்துகொள்ளுங்கள்.
ஏதும் அறியாமல்,
ஏன் சாகிறோமென்றும் தெரியாமல்
குருதியில் குளித்துக் கிடக்கிறது ஒரு குடும்பவிருட்சம்.
பிஞ்சை அணைத்தபடி பூவும்,
பூவைப் பிணைந்தபடி காயும்
தமிழருக்குக் காவலென்பதால் நாயும்
எரியுண்டு போவதுதான் எமக்கெழுதிய விதியா?
உலகமே!
இதற்கும் உன் மௌனம்தான் பதிலா?
மரங்களைத் தறியாதீர் என்பவர்களே!
இங்கு மனிதர்களைச் சரிக்கிறார்களே.
மிருகங்களை வதையாதீர் என்பவர்களே!
இங்கு பிள்ளைகளைக் கொல்கிறார்களே.
ஏன் கேள்வி எழுப்பவில்லை?
எமக்கான ஆறுதலை ஏன் தரவில்லை?
ஈழத்தமிழர் சாகப் பிறந்தவர்களா?
நாயைப்போல வாழப் பிறந்தவர்களா?
அல்லைப்பிட்டி அழுகைக்கானதல்ல
அடக்குமுறை அதிகாரத்திற்கான முடிவுக்கானது.
இரத்தமும் இரத்தமும் பேசும் மொழியில்
புத்தபெருமான் போதிக்கவில்லை
ஆயினும் பேரினவாதம் அதைத்தானே போஷிக்கிறது.
பொறுமையின் அளவுமட்டம் பெரியதானதல்ல
சின்ன உணர்வுத் திரியில் மூளக்கூடியது.
எம்மை மூட்டாதீர்
முளாசியெரிய வைக்காதீர்.
இது ஆற்றாது அழுபவரின் கண்ணீர்
அடக்குமுறைக்குள்ளே கிடப்பவரின் மௌனக்குரல்.
உலகமே!
எமக்குப் பதில்வேண்டும்
இப்போது வாருங்கள்
இல்லையெனில் எப்போதும் வரவேண்டாம்
எதற்காகவும் வரவேண்டாம்.
முடியுமெனில்
உங்கள் விழியில் எங்களை எடுங்கள்
இல்லையெனில்
எங்கள் வழியில் எங்களை விடுங்கள்.
பாருங்கள்
உற்றுப் பாருங்கள்
அந்தச் சின்னப் பிள்ளையின் சிரசிலிருந்து
பென்னம்பெரிய நெருப்பு மூள்கிறது.
தெரிகிறதா?
இது தணியாது
இனிப் பணியாது

புதுவை இரத்தினதுரை

# தற்போது தொடரும் வன்முறைகளுக்கு முழுப் பொறுப்பையும் அரசே ஏற்கவேண்டும்

### கனகசபை எம்.பி. விசனம்

கொழும்பு,மே16

அரச கட்டுப்பாட்டுப் பிரதேங்களில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் யாவற்றுக்கும் அரசே பொறுப்புக் கூற வேண்டும். குறிப்பாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனின் அலுவலகம், தமிழ் மாணவர் பேரவைக் காரியாலயம் மற்றும் வடக்கு - கிழக்கில் அரச கட்டுப்பாட்டுப்பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மனிதப்படுகொலைகள் யாவற்றுக்கும் அரசாங்கம் பதில் கூறவேண்டும். அத்துடன், இச்சம்பவங்களை சர்வதேச சமூகம் உணர்ந்து யார் குற்றவாளிகள் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

- இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கனகசபை குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செட்டிபாளையம் கிராமத்தில் நியாப் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளுள் ஒன்றான நியாப் ஒன்றுகூடல் மண்டபத் திறப்பு விழா நேற்றுமுன்தினம் உதவித் திட்டப் பணிப்பாளர் எம். சிவராசா தலைமை யில் இடம்பெற்றது.

அங்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கனகசபை எம்.பி. உரை நிகழ்த்துகையில் மேலும் கூறியதாவது:-

இன்று சிங்களதேசம் பேச்சு, போர் நிறுத்தம் என்ற போர்வையில் தமிழினத்தை அழிக்கும் நடவடிக்கையினை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் நாம் மடையர்களாக இருக்காமல், தமிழ் மக்களின் தலைவரான பிரபாகரனின் தலைமைத்துவத்தின் கீழ் எமது மக்களுக்கான விடுதலையை அவரது காலத்தில் பெறவேண்டும். இதற்காக யாவரும் ஒன்றுபட்டு எமது பலத்தைச் சிங்களதேசத்திற்கு வெளிக்காட்டவேண்டும்.

இன்றைய சூழலில் அரசாங்கம் யுத்தத்தை ஆரம்பித்துள்ளது. அரசாங்கத்திற்கு சமாதானத்தின் மீது உண்மையான ஆர்வம் அக்கறை இருந்திருக்குமாயின் விட்டுக் கொடுப்புக்களை மேற்கொண்டு, சமாதானப் பேச்சுகளை முன்னெடுத்திருக்க முடியும். ஆனால் அரசு அதைச் செய்யவில்லை - என்றார் அவர். (க)

## கூ.சங்கப் பணியாளருக்கு ஊக்குவிப்பு

தென்மராட்சி,மே16

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு விரைவில் ஊக்குவிப்புப் படி வழங்கப் படவுள்ளது.

சங்கக் கிளைக் கடைகளில் சிறப்பாகப் பணியாற்றும் பணியாளர்களுக்கே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சங்கத்தின் பணியாளருக்கு கூட்டுறவுத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆயிரத்து 200 ரூபா கொடுப்பனவும் வழங்க சங்க நிர்வாகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது. (117)

### உதயவாக்கு

ஏழைகளின் துன்பமானது இயற்கையாக ஏற்படாமல் எமது செயற்பாடுகளின் விளைவாகவிருக்குமானால் நாம் பெரும்பாவம் செய்தவர்களாவோம். - *சார்ள்ஸ் டார்வின்*

### நாளை

வைகாசி - 03
புதன்கிழமை
17.05.2006
திதி : சதுர்த்தி
முற்பகல் : 09.44
நட்சத்திரம் : பூராடம்
முன்னிரவு : 09.00
சுபநேரம் : 04.23 - 05.53
இராகுகாலம் : 11.53 - 01.23

# உள்ளூராட்சி தேர்தல் பிரசாரங்கள் நாளை நள்ளிரவுடன் நிறைவு

ஏறாவூர், மே 16

எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள நாட்டின் 22 உள்ளூராட்சி மன்றங்களுக்குமானச் சகல தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் நாளை புதன்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையும் - என உதவித் தேர்தல் ஆணையாளர் டபிள்யூ.பி.சுமணசிறி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றின் தலைவர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்தி முடிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் தேர்தல் செயலகம் மேற்கொண்டுள்ளது.

இந்தத் தேர்தலுக்கான தபால்மூல வாக்குப்பதிவு கடந்த 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெற்றது. வாக்காளர் அட்டை விநியோகம் தபால் அலுவலகங்கள் மூலமாகத் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதுவரை வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் உடனடியாக அருலுள்ள தபால் அலுவலகங்களுக்குச் சென்று தமது அடையாளத்தை நிரூபித்துத் தமக்குரிய வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக பிற்போடப்பட்ட4 மாநகர சபைகள், 4 நகரசபைகள் மற்றும் 14 பிரதேச சபைகள் என்பவற்றுக்கான தேர்தல் எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழத்தில் சுகாதார சேவையை மேம்படுத்த புதிய சட்டம் நேற்றுமுதல் நடைமுறையில்

கிளிநொச்சி,மே16

தமிழீழப் பகுதியில் சுகாதார சேவை யை மேம்படுத்தும் நோக்குடன் தமிழீழ சுகாதார நடைமுறைச் சட்டம் ஒன்று நேற்றுமுதல் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது.

தமிழீழ தேசியத் தலைவரின் ஒப்புதலுடன் தமிழீழ சட்டவாக்கச் செயலகம் இந்தச் சட்டத்தை வெளியிட்டுள்ளது.

இச்சட்டம் தொடர்பாக நீதி, நிர்வாகத் துறையின் சட்டவாக்கச் செயலகப் பொறுப்பாளர் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழீழ சுகாதார நடைமுறைச் சட்டமானது, தமிழீழத்தில் சுகாதாரத்தைப் பேணுவதையும் அதனை மேம்படுத்துவதையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதையும் அதனை மீறுவோர் மீது நடவடிக்கையை எடுப்பதற்குமாக உருவாக்கப்பட்டுத் தமிழீழத் தேசியத் தலைவரின் ஒப்புதலுடன் 2006ஆம் ஆண்டின் 3ஆம் எண் சட்டமாகத் தமிழீழச் சட்டவாக்கச் செயலகத்தினால் வெளியிடப்படுகிறது.

இச்சட்டத்தின் இயல் - 01 - பொது விளக்கங்களையும் -

இயல்-02,03,04,05,06,07 - தமிழீழப் பகுதியில் தனியார் மருத்துவமனை, ஆங்கில மருந்து விற்பனை நிலையம், வெதுப்பகம், பல்பொருள் விற்பனை நிலையம், அரைக்கும் ஆலை, உணவகம், தேநீர்ச் சாலை, குளிர்பான நிலையம் என்ப வற்றை நடத்துவதற்குக் கொண்டிருக்க வேண்டிய அடிப்படை ஒழுங்குகளையும் அவற்றினை மீறி நடப்போருக்கான ஒறுப்புகளையும் -

இயல்-08 - இயல் - 02, 03,04,05,06,07 என்பவற்றிற்கான உணவு, மருந்தக ஆய்வாளர் பற்றியும் ஆய்வு மேற்கொள்ளுதல் தொடர்பான நடவடிக்கைகளையும் மற்றும் பொதுவான ஏற்பாடுகளையும் - கொண்டமைந்துள்ளது.



குடாநாட்டில் தொடரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் யாழ். செயலகம் வெறிச்சோடிக் காட்சியளிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: தமிழினியன்)*

## கடற்படை மீதான தாக்குதலுக்கு ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்

கொழும்பு,மே16

"இலங்கைக் கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் எள்ளளவேனும் யோசிக்காமல் மேற்கொண்ட தாக்குதலானது சமாதானப் பேச்சுக்களை ஆபத்தான கட்டத்திற்குத் தள்ளியுள்ளது"

- இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. கடந்த வியாழக்கிழமை வெற்றிலைக்கோணிக் கடற்பரப்பில் இடம்பெற்ற கடற்சமரையடுத்து ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இத்தாக்குதலானது அப்பட்டமான யுத்த நிறுத்த மீறலாகும். இது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

## சர்வதேச மாணவர் பேரவைத் தாக்குதலை கண்டிக்கின்றன மாணவர் அமைப்புகள்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையும் நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகமும் எரிக்கப்பட்டதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், யாழ். உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர் ஒன்றியம் ஆகியன கண்டனம் தெரிவித்துள்ளன.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்,

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம் ஆகியவை ஸ்ரீலங்கா இராணுவத்தால் அழிக்கப்பட்டு பெறு மதிவாய்ந்த சொத்துக்களும் அழிக்கப்பட்ட சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்திற்கே இந்த நிலை என்றால், குடாநாட்டில் வாழும் சாதாரண மக்களின் பாதுகாப்பு கேள்விக்குரியதாகவே இருக்கின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். உயர்தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்,

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, நாடாளுமன்ற உறுப்பினரின் அலுவலகம் ஆகியவை எரிக்கப்பட்ட செயல் ஒட்டுமொத்த தமிழ் மாணவர்களுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே நாம் கருதுகின்றோம்.

இச்செயற்பாட்டின்மூலம் அனைத்து மாணவர்கள் மனதிலும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ்மக்கள் ஸ்ரீலங்கா அரச பயங் கரவாதத்தின் அடக்குமுறையில்படும் அவலங்களை வெளியுலகிற்கு எடுத்துக்காட்டிவந்த ஒரு ஜனநாயக ரீதியான கல்வித் தொண்டு நிறுவன மாக இயங்கிவருகின்ற இந்நிறுவனத்தின்மீது மேற்கொண்ட இந்தச் செயற்பாட்டை எமது நிறுவன மாண வர்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சை

## தேசிய அடையாள அட்டை இல்லாத மாணவர்களுக்கு விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே16

எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படங்கள் வைத்திருந் தால் பரீட்சைக்குத் தோற்ற அனும திக்கப்படுவர்.

- இவ்வாறு பிரதிப் பரீட்சை ஆணையாளர் எ.சிவலிங்கம் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் நிலவும் அசாதா ரண சூழ்நிலை காரணமாக விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் அதனைப் பெறுவதற்குப் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது.

இதனைக் கருத்திற்கொண்டு உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படங்கள் மூலம் மாணவர்களைப் பரீட்சைக்கு அனுமதிக்கவுள்ளோம்.

பாடசாலையூடாகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தங்களின் புகைப்படங்களை அதிபரினால் உறுதிப்படுத்தியிருக்கவேண்டும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் புகைப்படங்கள் கிராம சேவையா ளர், உதவி அரச அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியவர்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் - என்றார் அவர். (3-14)

## ஏறாவூர் பொலீஸ் காவலரண் மீது சனியன்று இரவு கைக்குண்டு வீச்சு

ஏறாவூர், மே16

ஏறாவூர் 5ஆம் குறிச்சி பொலீஸ் காவல்நிலையம் மீது வெள்ளிக்கிழமை இரவும் சனியன்று அதிகாலை வேளையிலும் இரண்டு கைக்குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்போது பொலீஸார் மேற்கொண்ட பதில் தாக்குதலினால் ஏழு பொதுமக்கள் காயமடைந்துள்ளதுடன் ஆறு வீடுகளும், இரண்டு வாகனங்களும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன என பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் தம்பிப்பிள்ளை மகேஸ்வரி (வயது 55) என்பவர் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையிலும் சந்திரன் சங்கீதனா (வயது 06) என்ற சிறுமி ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 5 பேரும் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். வான் ஒன்றும் கன்ரர் ரக வாகனம் ஒன்றுமே சேதமடைந்துள்ளன.

சனிக்கிழமை இரவு 11.15 மணியளவில் ஏறாவூர் பொலீஸ் நிலையத்தின் பின்புறமாகவுள்ள 5ஆம் குறிச்சி முன்னரங்கக் காவலரண்களை நோக்கி முதலாவது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இரண்டாவது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் ஏறாவூர் பொலீஸார் தெரிவித்தனர். துப்பாக்கி மற்றும் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியே இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொலீஸாரும் பதில் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலின்போது அச்சத்தினால் வீடுகளை விட்டு வெளியேறிய பொதுமக்கள் நேற்று தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். இந்தச் சம்பவத்தையடுத்து இப்பிரதேசத்தில் நேற்றுக்காலை இராணுவத்தினரால் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டு 6 தமிழ் வாலிபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

ஏறாவூர்-5 பெரியதம்பிரான் வீதியைச் சேர்ந்த அமிர்தலிங்கம் சுரேஷ் (வயது 20), செல்லப்பா சுதர்ஷன் (வயது 20), யோகன் கஜேந்தின் (வயது 17), முத்துலிங்கம் வசந்தன் (வயது 22) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சின் இணைப்பாளர் எம்.எஸ்.சுபையிர் ஏறாவூர் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் மேற்கொண்ட பேச்சையடுத்து கைதுசெய்யப்பட்ட ஆறு பேரும் நேற்றுக்காலை விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவங்களினால் ஏறாவூர் பிரதேசத்தில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (க)

## வவுனியா நகரசபை மாற்றான் கையில் செல்வதை தடுப்பதற்கு தமிழ்த்தேசியத்திற்கு வாக்களியுங்கள்

### அடைக்கலநாதன் எம்.பி. உருக்கமான வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மே16

வன்னித் தொகுதியில் நடைபெற வுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் சகலரும் தமது வாக் குகளைப் பதிவுசெய்வது நம் தமிழ்த் தாய்க்கும் வன்னித் தமிழ் மண்ணுக்கும் செலுத்த வேண்டிய கடமையும் உரிமையும் ஆகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் அ.செல்வம் அடைக்கலநாதன்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வவுனியா நகரசபை எல்லைக்குள் நடந்தேறிக்கொண்டிருக்கும் பொதுமக்களுக்கும் வியாபாரிகளுக்கும் எதிரான கொலை, கொள்ளை, ஆயுத பயமுறுத்தல்களால் வாழ்க்கையே வெறுமையானதாய் மக்களுடைய அன்றாட நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பது உலகறிந்த விடயமாகும்.

ஒவ்வொருநாளும் ஏதோ ஒரு விதத்தில் மக்களது சகஜ வாழ்க்கை பாதிக்கப்பட்டு, விரக்தியுற்றுள்ள சூழலில் உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் ஆர்வம் காட்டமாட்டார்கள் என்ற நிலையே தற்போது இருப்பதைச் சாதகமாக இன விரோதிகள் பயன்படுத்தி, வவுனியா நகரத்தைத் தம்வசமாக்கிக் கொள்ள எத்தனிப்பர். ஆகவே, இது விடயமாக மக்கள் எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் செயற்படவேண்டியது அவசியமானதாகும்.

குழப்பவாதிகளின் எண்ணப்படி வவுனியா நகர மக்களின் பூரண ஒத்துழைப்பின்மையால் நகரம் முழுவதும் மாற்றான் கையில் சென்றுவிடுமாகில், சுயநிர்ணய உரிமை கோரி பொங்குதமிழ் நிகழ்வுகளில் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் பங்கேற்று உலக நாடுகளை வியப்புறச் செய்த செயற்பாடுகள் அத்தனையும் வீணாக்கிவிடும். வன்னி மக்கள் மனம்மாறிவிட்டனர். தமது கொள்கைகளை ஆதரிக்கின்றனர் என அரசும், இன விரோதிகளும் உலகளாவிய ரீதியில் பரவலாக கொக்கரிக்கும் நிலை உருவாக நாம் ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

தற்போதைய வவுனியா நகர சூழல் உள்ளூராட்சித் தேர்தலுக்கு உகந்ததாயில்லை என்ற நிலை இருந்தாலும் கூட, அது நடைபெறும் பட்சத்தில் விரக்தியடைந்த மக்கள் அதிலிருந்து ஒதுங்கி நிற்பார்களேயானால், அதை மாற்றார் தமக்குச் சொந்தமாக்கச் சாதகமாக்கிக் கொள்வர் என்பதை மனதிலிருத்தி ஒவ்வொரு வாக்காளரும் தமது வாக்குரிமையால் தமிழ்த் தேசியத்தின் சின்னமான வீட்டிற்கு மட்டுமே தமது புள்ளடிகளை இடவேண்டுமென வேண்டிநிற்கின்றேன்.

வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் அபேட்சகர்களை அறிமுகம் செய்து வாக்குகள் கேட்பதற்குக் கால நேரம் போதாத நிலையில் மக்கள் இதையிட்டுச் சிந்தித்துச் செயற்படவேண்டும். ஒவ்வொரு வாக்குரிமை பெற்ற வாக்காளரும் தமது வாக்குகளைப் பதிவுசெய்வது நம் தமிழ்த் தாய்க்கும் வன்னித் தமிழ் மண்ணுக்கும் செலுத்த வேண்டிய கடமையும் உரிமையும் என்பதை மனதிலிருத்திச் செயற்பட வேண்டுமெனக் கேட்டுநிற்கின்றேன் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பான இடங்களை நோக்கி நகருமாறு மக்களிடம் கோரிக்கை

## தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மே.16

குடாநாட்டில் தொடரும் படுகொலைகளில் சிக்காது, பாதுகாப்பு இடங்களை நோக்கி நகருங்கள் என தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் பொது மக்களைக் கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறீலங்காவின் ஆக்கிரமிப்பு படைகளால் யாழ். குடாநாட்டில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் தமிழின படுகொலைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம். புத்தூர், நெல்லியடி, மந்துவில், தீவகம் என குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம் தனது கொலை வெறியை நிறைவேற்றி வருகின்றது.

தமிழின பற்றாளர்களும் இளைஞர்களும் கண்டபடி படையினரால் சுட்டுக்கொல்லப்படுகின்றனர். அல்லைப்பிட்டி, புளியங்கூடல் பகுதிகளில் சிறீலங்கா கடற்படையினராலும் அதனுடன் இணைந்து இயங்கும் துணைக் குழுக்களினாலும் குழந்தைகள் உட்பட பதின்மூன்று பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 10 இற்கும் மேற்பட்ட கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. எரிபொருள் நிரப்பு நிலையங்களும் உடைக்கப்பட்டுள்ளன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலரும் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

திட்டமிட்ட ரீதியில் தமிழினத்தை அழிக்கும் நோக்குடனேயே இந்தப் படுகொலைகள் இடம்பெறுகின்றன. எனவே இனியும் பொறுமையாக இருந்து அழிந்து போகாமல், பாதுகாப்பான இடங்களுக்கு நகருமாறு மக்களை வேண்டுகின்றோம். சிறிலங்காப் படைகளின் இந்தக் காட்டுமிராண்டித் தனத்தை கட்டுப்படுத்துமாறு சர்வதேச சமூகத்தை வேண்டுகின்றோம். விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால் பாரிய யுத்தம் ஏற்படும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றோம்- என்றுள்ளது.


நவீன CAR வாடகைக்கு

★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்
போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)



T.P.: 0777-903090
0777 246117


# அம்பாந்தோட்டைப் பகுதியில் - 14 வடபகுதி இளைஞர்கள் கைது

அம்பாந்தோட்டை, மே.16

தனியார் வாகனமொன்றில் கொழும்பு நோக்கிப் பயணம் செய்துகொண்டிருந்த 14 தமிழ் இளைஞர்கள் அம்பாந்தோட்டை சோதனைச் சாவடியொன்றில் நடைபெற்ற சோதனையின் போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஊர்காவற்றுறை, கோப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களென அம்பாந்தோட்டைப் பொலீஸார் தெரிவித்தனர். இவர்களிடம் தேசிய அடையாள அட்டைகளும் இருந்தும் அந்த அடையாள அட்டை உண்மையானவையா என்பதைக் கண்டறிவதற்காகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று அம்பாந்தோட்டைப் பொலீஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே தெரிவித்தார்.

இவர்கள் 14 பேரும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டதோடு பதில் நீதிவான் இவர்களை 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி கட்டளையிட்டுள்ளார்.

(க-187)

# நவாலியில் புதிய கட்டடத்தில் கமநல சேவை நிலையம்

யாழ்ப்பாணம்,மே16

நவாலி டச்சு வீதியில் - கமநல சேவைகள் நிலையத்துக்கான கட்டுமானப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்றுவருகின்றன.

நிகொட் நிதியுதவியுடன் நவீன வடிவில் புதிய கமநல கேந்திர நிலையம் அமைக்கப்பட்டுவருகிறது.

மேற்படி கட்டுமானப் பணிகள் முடிவுற்றதும் வலி. தென்மேற்கில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் விவசாயிகள் புதிய கமநல சேவைகள் திணைக்களத்தின் ஊடாக நன்மை யடைவர் என யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

கரவெட்டிப் பிரதேசத்திலும் இதேபோன்றதொரு புதிய கமநல சேவைகள் நிலையம் அமைக்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (185)

# புத்தளத்தில் வாகன விபத்து

பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்களை லொறியொன்று மோதியதால் அவர்கள் இருவரும் உயிரிழந்த பரிதாபகரமான சம்பவம் புத்தளம் மங்களவெளிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:-

மங்களவெளியிலுள்ள பாடசாலையொன்றில் ஆறாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர்களான முஹம்மது இர்பான் (வயது-13), சந்துன் பிரியந்த (வயது-13) ஆகிய இருவரும் பாடசாலை முடிந்து வீடு திரும்பும்போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

லொறியொன்று கட்டுப்பாட்டு நிலையையும் மீறி குடை சாய்ந்ததினால் இரு சிறுவர்களும் அதில் சிக்குண்டனர். இச்சமயம் முஹம்மது இர்பான் அந்த இடத்திலேயே மரணமானான், மற்றைய மாணவரான சந்துன் பிரியந்த வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது அங்கு மரணமானான்.

(க-256)

# வாழைச்சேனையில் சூடு தேவாலய ஊழியர் காயம்

ஏறாவூர், மே 15

வாழைச்சேனை - மெதடிஸ்த தேவாலயப் பணியாளர் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளார் என வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர்.

கிரான், ஆச்சிரமம் வீதியை வசிப்பிடமாகக்கொண்ட அருள்செல்வம் அருள்ராஜ் (வயது 25) என்பவரே இச்சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

இவர் இரவு 7.15 மணியளவில் தேவாலய நுழைவாயிலில் நின்றுகொண்டிருந்தபோது மோட்டார் சைக்களில் வந்த இரண்டு இனந்தெரியாத ஆயுதபாணிகள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த தேவாலய ஊழியர் உடனடியாக வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனைப் பொலீஸார் மேற்கொண்டுள்ளனர். (க-157)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 24 - 12 - 1925



மறைவு 16 - 04 - 2006

### திருமதி முருகேசு மீனாட்சி

எங்கள் அன்புத் தெய்வம் அணைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியோருக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (16.05.2006) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் பங்கேற்று, ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

- குடும்பத்தினர்.

'உல்லைக்கலட்டி'
ஸ்ரீ றஞ்சன் வாசிகசாலை வீதி,
புலோலி மேற்கு,
புலோலி. (50087)(21.15.45)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்



திருமதி
### பத்மலோஜினி நடராஜா

மலர்வு 26-07-1952
உதிர்வு 17-04-2006

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எமது வாழ்விற்கு வழிகாட்டியாய் வாழ்ந்த எம் குடும்பக் குலவிளக்கே!
வாழவேண்டிய வருடங்கள், பார்க்க வேண்டிய விடயங்கள் பல இருக்க
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு சென்றது ஏன்?
எங்கள் அன்புத் தெய்வமே! மாதம் ஒன்றல்ல பல நூறு ஆனாலும் - எம்
உயிர் உள்ளவரை - உங்களது
நீங்காத நினைவுகள் எம் நெஞ்சில் என்றும்
ஒளி வீசிக் கொண்டே இருக்கும்

எம் அன்புத் தெய்வத்தின் சிவபதமடைந்த செய்தி கேட்டு எங்களோடு தங்களது துயரில் நேரடியாகக் கலந்துகொண்டும், தொலைபேசி, தந்தி, அஞ்சலி பிரசுரங்கள், மலர்வளையங்கள் மூலமும் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கச்சார் வெளி,
பளை. (50205)(21.45.15)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 11 . 04 . 1937
உதிர்வு 08 . 05 . 2004

### அமரர் கந்தையா தருமலிங்கம்

(ஓய்வு பெற்ற முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கக் கிளை)

திதி: சங்கடஹர சதுர்த்தி (16.05.2006)

பாச நெகிழ்வுக்கும்- எம்
மன மகிழ்வுக்கும்
குன்றா ஒளி விளக்காய்
நின்ற எம் அப்பாவே!
இன்றும் விழி நீரூடே தேடுகின்றோம்
காலமது கடிதெனக் கரைந்திடினும்
ஞாலமது உள்ளவரை
வாழும் உங்கள் நினைவுகள் எம்முள்ளே

குறிப்பு: எமது குடும்பத் தலைவரின் 2 ஆம் ஆண்டு நினைவாக இன்று (16.05.2006) செவ்வாய்க்கிழமை உடுப்பிட்டி சந்திரசேகர வீரபத்திர சுவாமி கோயில் அன்னதான மண்டபத்தில் இடம்பெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புவனேஸ்வரி அம்மன் கோயிலடி,
உடுப்பிட்டி. (சி.49279) (39)

உங்கள் பிரிவால் என்றும் துயருறும்:
குடும்பத்தினர்.

அனைவரும் வாருங்கள்

அறிவியல் உலா - 2006
விசுவமடு.

Youth Centre for Science & Education

உலாவில்..........
⇒கணனியியல்
⇒இலத்திரனியல்
⇒தொழிநுட்பவியல்

இன்னும் பல அறிவியல் நவீனங்களை காண விரையுங்கள்.



YUCSE

மு/விசுவமடு
மகாவித்தியாலயம்
அருகாமை, விசுவமடு,
முல்லைத்தீவு.

15.05.2006 - 17.05.2006
காலை 9.00 - 12.30
மாலை 2.00 - 5.00 வரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி நகரப் பகுதியில் சுகாதாரத்தைப் பேண அறிவுறுத்து

வட்டக்கச்சி,மே16

கிளிநொச்சி நகர சுற்றுப்புறச் சூழல் சுகாதாரம் பேணப்படல் வேண்டுமென தமிழீழ சுகாதார சேவையின் சூழல் மேம்பாட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கிளிநொச்சி நகரின் நிலையங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு முன்னாலுள்ள வீதியோரங்களைச் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணவேண்டிய பொறுப்பு அந்நிலைய உரிமையாளர், பொறுப்பாளர்களையே சாரும்.

எனவே, வீதியோரங்களில் சேரும் உக்கக்கூடிய திண்மக் கழிவுப் பொருள்களை கறுப்பு நிற நெகிழ்தன்மையுள்ள பொலித்தீன் பைகளிலும் உக்கும் தன்மையற்ற திண்மக்கழிவுப் பொருள்களை நீல நிற நெகிழ்தன்மையுள்ள பொலித்தீன் பைகளிலும் சேகரித்து கரைச்சிப் பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனத்தில் கொடுத்து கழிவகற்றலைச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இந்நடவடிக்கை அமுலுக்கு வந்துள்ளது.

இதற்கு ஒத்துழைப்பு வழங்காத நிறுவனங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அத்துடன், கறுப்பு, நீல நிற நெகிழ்தன்மையுள்ள பொலித்தீன் பைகளை கரைச்சிப் பிரதேச சபையில் பை ஒன்றுக்கு 6 ரூபா வீதம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் இதுதொடர்பான விளக்கங்களும் ஆலோசனைகளும் தேவைப்படும் போது தமிழீழ சுகாதார சேவைகள் நடுவப் பணியகத்தின் சூழல் மேம்பாட்டுப் பிரிவினரிடம் சனிக்கிழமைகளில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது - என்று உள்ளது. (405)

## யாழ். - வன்னிப் பகுதி வேளாண் இடுபொருள் விலை நிர்ணயம்

சீ.ஐ.சீ., ஹேலீஸ் உர நிறுவனங்களால் ஆக்கப்பெறும் கீழ்வரும் உரங்களின் ஆகக் கூடிய விற்பனை விலை கீழ்வருமாறு தீர்மானித்துள்ளோம். குறித்த உரங்களை 2006.05.15ஆம் நாளிலிருந்து அவ்விலைகளில் விற்பனை செய்யுமாறு யாழ். - வன்னிப் பகுதி வேளாண் இடுபொருள் வாணிப உரிமையாளரை நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதி கேட்டுள்ளது. விலை விவரம் வருமாறு:

| உரத்தின் பெயர் | ஆக்க நிறுவனத்தின் பெயர் | விற்பனை விலை | |
|---|---|---|---|
| | | வன்னிப் பகுதி | யாழ். மாவட்டம் |
| யூரியா (50 கிலோக்கிராம்) | சீ.ஐ.சீ. | 1,995.00 | 2,016.00 |
| | ஹேலிஸ் | 1,995.00 | 2,016.00 |
| அமோனியா (50 கிலோக்கிராம்) | சீ.ஐ.சீ. | 1,486.00 | 1,507.00 |
| | ஹேலிஸ் | 1,391.00 | 1,412.00 |
| வி 1 (50 கிலோக்கிராம்) | சீ.ஐ.சீ. | 1,785.00 | 1,806.00 |
| | ஹேலிஸ் | 1,785.00 | 1,806.00 |
| ரீ.எஸ்.பி. (50 கிலோக்கிராம்) | சீ.ஐ.சீ. | 1,627.50 | 1,648.50 |
| | ஹேலிஸ் | 1,628.00 | 1,649.00 |
| ரீ.டி.எம். (50 கிலோக்கிராம்) | சீ.ஐ.சீ. | 2,074.00 | 2,095.00 |
| | ஹேலிஸ் | 2,074.00 | 2,095.00 |
| எம்.ஓ.பி. (50 கிலோக்கிராம்) | சீ.ஐ.சீ. | 1,706.25 | 1,727.00 |
| | ஹேலிஸ் | 1,806.00 | 1,727.00 |

## உரிமங்களைப் பெற்றுக்கொள்க!

பூநகரி,மே16

பூநகரிப் பிரதேசத்தில் காணப்படும் கோழிப்பண்ணைகள், மாட்டுப்பண்ணைகள், ஆட்டுப்பண்ணைகள் போன்றவற்றை வைத்திருப்பவர்கள் சுற்றாடல் சுகாதாரத் திற்கமைவாகப் பதிவுகளை மேற்கொண்டு உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையின் பூநகரிப் பிரதேச இணைப்பாளர் அரவிந்தன் அறிவுறுத்துள்ளார். (403)

## சாதாரணதரப் பரீட்சையில் சித்திபெற்றோர் கௌரவிப்பு

புதுக்குடியிருப்பு,மே16

கடந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 10 பாடத்திலும் 'ஏ' தரத்தில் சித்திபெற்ற முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களை இலங்கை வங்கியின் முல்லைத்தீவுக் கிளை கௌரவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 மாணவர்கள் 10 பாடங்களிலும் 'ஏ' தரத்தில் சித்தி பெற்றுள்ளனர்.

இலங்கை வங்கியின் முல்லைத்தீவுக் கிளையின் முகாமையாளர் க.லக்ஷ்மண சர்மா தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது.

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.நாகரத்தினம், புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஜீ.எஸ்.பரமேஸ்வரன், இலங்கை வங்கியின் வன்னிப் பிராந்திய முகாமையாளர், ச.திருச்செல்வம் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்ததுடன் கருத்துரைகளையும் வழங்கினார்கள். (353)

## புதிய வகுப்புகள் ஆரம்பம்

வட்டக்கச்சி,மே16

தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவில் கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்று வரும் கணனி மையத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன என கிளிநொச்சி மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பினர் தெரிவித்தனர்.

புதிய கற்கைநெறிகள்ஆரம்பமாகவுள்ளதாகவும் இதில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னதாக இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் இயங்கிவரும் கணனிப்பயிற்சி நிலையத்தில் தமது பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (405)

## கொதித்தாறிய நீரை பருகுமாறு கோரிக்கை

கிளிநொச்சி,மே16

கிளிநொச்சியில் பொதுநீர் விநியோகத்தின் மூலம் மக்களுக்கு வழங்கப்படும் குடிதண்ணீர் மக்களின் உடல் நலத்துக்கு உகந்ததல்லவெனத் தமிழீழ சுகாதார சேவைகள் தொற்றுநோய் தடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

எனவே, அதனைக் குடிதண்ணீராகப் பயன்படுத்துபவர்கள் கொதிக்கவைத்துப் பயன்படுத்துமாறும் அவர் அறிவித்துள்ளார்.

## மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

மன்னார் மாவட்டத்தின் ஆண்டான் குளக் கணனிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சியினை மேற்கொண்டு நிறைவுசெய்த 7 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த 28ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் மாவட்டப் பணிமனையில் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட இணைப்பாளர் ஜசிகரன் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச்சுடரை அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் மரியநாயகம் குரூஸ் ஏற்றினார். தேசியக் கொடியைப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் செழியன் ஏற்றிவைத்தார். கருத்துரைகளை மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் செழியன், பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் சி.சுகுணன் ஆகியோர் வழங்கினர். இதனையடுத்து மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## 108 பேர் மருத்துவ மாதர்களாக நியமனம் பெறவிருக்கின்றனர்

குருநகர்,மே16

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களிலுள்ள வைத்திய நிறுவனங்களில் சேவை புரியும் நிரந்தர ஊழியர்களிலிருந்து 108 பேர் மருத்துவ மாதுக்களாகப் பயிற்சி பெற்று பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

இவர்களில் 67 பேர் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களில் சேவை புரியவுள்ளனர்.

இவர்களுக்கான மருத்துவ மாது நியமனக் கடிதங்கள் திருகோணமலையில் இயங்கி வரும் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

அதுவரை இவர்களுக்கான தற்காலிக நியமனக் கடிதங்கள் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலவலகம் மூலம் வழங்கப்படும் எனவும் - அவர்கள் தமது வதிவிடங்களுக்கு அருகில் அமைந்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடமையை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் - யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (51)

## வெடி கொளுத்த அனுமதிபெற அறிவுறுத்து

குருநகர்,மே16

குருநகரில் திருமணக் கொண்டாட்டங்கள் மற்றும் வரவேற்பு கொண்டாட்டத்தின் போது பட்டாசுக்களைக் கொளுத்தக் கூடாது எனவும் அப்படி கொளுத்தவேண்டுமானால் படையினரின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் எனக் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பு ஒலிபெருக்கி மூலம் குருநகர் மக்களுக்குப் பகிரங்க வேண்டுகோளை விடுத்துள்ளது. (51)

## சந்தை இடமாற்றம்

யாழ்ப்பாணம்,மே16

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆலய வாயிலில் இயங்கி வந்த மாலைநேர மீன் சந்தை இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது மேற்படி மாலைநேர சந்தை சாவல்கட்டு சந்தைப் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் எம்.சாந்தசீலன் இதற்கான நடவடிக்கை எடுத்துள்ளார்.

தற்போது அனுமதியற்ற முறையில் யாழ். மானிப்பாய் பிரதான வீதியில் சாவல்கட்டு சந்தைக்குச் செல்லும் ஒழுங்கை முகப்பில் இச்சந்தை இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (185)

## வலி.தென்மேற்குப் பகுதியில் இரு வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,மே16

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட இரு வீதிகள் விரைவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

மானிப்பாய் கிராம உப அலுவலகத்திற்குட்பட்ட ஆனைக்கோட்டை சிவன் வீதியும் -

பண்டத்தரிப்பு பட்டின உப அலுவகத்திற்குட்பட்ட பிரான்பற்று தம்பித்துரை வீதியும் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக பிரதேச சபை செயலாளர் எம்.சாந்தசீலன் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த வருடம் 'மாகா நெழும' திட்டத்தின் கீழ் வீதி புனரமைப்பு செய்யப்பட்டபோதும் அதற்கான நிதி இன்னும் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் வழங்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வருடம் பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்டத்தின் கீழ் பலநோக்கு வேலைத் திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன என செயலாளர் மே.சாந்தசீலன் மேலும் தெரிவித்தார். (185)



மக்கள் வங்கி சுன்னாகம் கிளையில் மகளிர் தின விழாவும் பரிசளிப்பு வைபவமும் கடந்த மாதம் 14ஆம் திகதி இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர் டாக்டர் திருமதி யாழினி யோகேஸ்வரன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

சிறப்பு விருந்தினர்களான டாக்டர் எஸ்.யோகேஸ்வரன், உதவிப் பிராந்திய முகாமையாளர் ஏ.குகதாசன், இளைப்பாறிய வங்கி உத்தியோகத்தர் திருமதி எஸ்.ஜெயராஜா, நீதிமன்ற உத்தியோகத்தர் செல்வி அ.கந்தையா ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## விவசாயிகள் ஓய்வூதியம் விரைவில் அதிகரிக்கப்படும்

யாழ்ப்பாணம்,மே16

நாடளாவிய ரீதியில் விவசாயிகள் பெற்றுவரும் ஓய்வூதியக் கொடுப்பனவு விரைவில் அதிகரிக்கப்படவுள்ளது.

விவசாய ஓய்வூதியப் பாதுகாப்பு சபை தலைமையகம் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது.

விவசாயிகளின் ஓய்வூதியத்தை அதிகரிக்குமாறு கடந்த வருடங்களாக விவசாயக் காணி அமைச்சரையும் ஜனாதிபதியையும் சம்பந்தப்பட்ட விவசாய ஓய்வூதிய சபைத் தலைவரையும் கோரி வந்தோம் என மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத் தலைவர் மா.க.முதலியார் தெரிவித்தார்.

தற்போது மேற்படி ஓய்வூதிய அதிகரிப்பு தொடர்பாக மஹிந்த சிந்தனையில் ஆராயப்பட்டுள்ளதுடன் விரைவில் ஓய்வூதிய அதிகரிப்பு குறித்து விவசாய காணி அமைச்சினால் அறிவிப்பு வெளியாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (185)

## சேவை நீடிப்பு

குருநகர்,மே16

ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணிமனையில் கடந்த பல வருடங்களாக முகாமையாளராகப் பணியாற்றிவந்த எஸ்.யோகராசாவுக்கு மேலும் ஒரு வருட கால சேவையாற்றும் அனுமதி சங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. (51)

## ஆழிப்பேரலை கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,மே16

ஆழிப்பேரலையால் வீடு சேதமடைந்து மீள்கட்டுமானப் பணிகளை ஆரம்பித்தவர்களுக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

உடுப்பிட்டி வடக்குப் பிரதேசத்திற்குட்பட்ட ஊரிக்காடு, நாவலடி, மயிலியதனை, கெருடாவில் பகுதிகளில் வீடு சேதமடைந்தவர்களுக்கான முதலாம் கட்ட கொடுப்பனவாக ரூபா 50ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டக் கொடுப்பனவிற்கான மதிப்பீட்டு வேலைகள் தொழில்நுட்ப அதிகாரிகளால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. விரைவில் இரண்டாம் கட்ட கொடுப்பனவு வழங்கப்படும் எனப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது. (185)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு லாச்சி உள்ள மேசைகள் விற்பனைக்குண்டு. பார்வை நேரம் 9 AM - 4PM வரை. தொடர்பு: No.644, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0777 - 110916.

(50234)


## கண்ணீர் அஞ்சலி



எமது தர்மகர்த்தா சபை கௌரவ செயலாளர்

**திரு.வி.மாணிக்கம்**

(அதிபர், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்)

**திருமதி சிறிறஞ்சிதமலர் மாணிக்கம்**

(மல்லாகம் பிரதேச சபை)

அவர்களின் கனிஷ்ட புத்திரி

**செல்வி லாவண்யா** (யசோ)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தர்மகர்த்தா சபை,
ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி கோயில்
(பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில்).

(50243)(39-32-17-15)

# ரெலோ அலுவலகத் தாக்குதல் குறித்து படை அதிகாரிகளிடம் முறைப்பாடு

வவுனியா, மே 16

வவுனியா - முதலியார் குளத்தில் இயங்கிவந்த 'ரெலோ' கட்சியின் அலுவல கம் தாக்கப்பட்டமை தொடர்பில் அக்கட்சி யின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மற்றும் இராணுவக் கட்டளைத் தளபதி பிரிகேடியர் கே.எஸ்.பெர்னாண்டோ வுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி காரியாலயத்திற்குள் கடந்த சனி யன்று அத்துமீறி உள்நுழைந்த இராணுவத் தினர் அக்கட்சியின் உறுப்பினரான குறிப்பிட்ட இளைஞர் ஒருவரை விசாரியுள் ளனர். அவர் அங்கு இல்லாததையடுத்து அங்கு நின்ற கட்சியின் மற்றைய உறுப்பினர் களைத் தாக்கியுள்ளதுடன் அலுவலகத்தை யும் சேதப்படுத்தினர் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

அலுவலகம் முழுவதும் சல்லடை போட்டுத் தேடிய இராணுவத்தினர் அலுவலகத்திற்குள்ளிருந்த கட்சியின் முக்கியஸ்தர்களின் படங்களை விழுத்தி அவமரியாதை செய்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இராணுவத்தினரின் இந்த அடாவடித்தனம் தொடர்பாக அடைக்கலநாதன் எம்.பி. செட்டிக்குளம் இராணுவக் கட்டளைத் தளபதியுடன் நேற்றுமுன்தினம் பேச்சுகளை மேற்கொண்டார் எனவும், சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவுள்ள இராணுவத்தளபதி சம்பந்தப்பட்ட தரப்புகளையும் பணித்துள்ளார் எனவும் செய்திகள் தெரிவித்தன.

(க)

## 6ஆம் ஆண்டு நினைவில்...

தோற்றம் 16 - 05 - 1950



மறைவு 21 - 04 - 2000

**திருமதி சண்முகமலர் தர்மராஜா**

(புனிதம், இணுவில் மேற்கு)

திதி: 16.05.2006

அம்மா!
காலங்களே தந்த சொத்து!
காலங்களே பறித்த சொத்து!
காலங்களே எம்மை குதூகலிக்கவும் வைத்தன!
காலங்களே எம்மை கலங்கவும் வைத்தன அம்மா!

வே.தர்மராஜா,
கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
இணுவில் மேற்கு, சுன்னாகம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சபையின் செயலாளரான

**திருமதி ஸ்ரீரஞ்சிதமலர் மாணிக்கம்**

அவர்களின் புதல்வி

**செல்வி லாவண்யா மாணிக்கம்**

அவர்கள் இறையடி எய்திய செய்திகேட்டு நாம் மிகுந்த அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
காங்கேசன்துறை.

(சி.49301)(39-32-15-17)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம்,மே16

வடமராட்சி வடக்கு, தும்பளை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளியம்மன் வடபத்திரகாளியம்மன் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 12ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

அடுத்தமாதம் 6ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும் 7ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

* * *

யாழ்ப்பாணம்,மே16

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயப் பெருவிழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 13 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்

**வி. மாணிக்கம்**

அவர்களின் பாசமிகு புதல்வி

**செல்வி லாவண்யா மாணிக்கம்** (யசோ)

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து கொள்வதுடன் எமதுஆழ்ந்த அனுதாபங்களையும் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்,
யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

(50240)(39-32-17-15)

# மரண அறிவித்தல்கள்

## சாந்தலிங்கம் அமிர்தவல்லி



வேலணை மேற்கு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தலிங்கம் அமிர்தவல்லி அவர்கள் நேற்று (15.05.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சொக்கலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் தம்பு - செல்லமுத்து தம்பதியரின் மருமகளும் தங்கசாமி, லெட்சுமி, சவுந்தரம் ஆகியோரின் சகோதரியும் தம்பு சாந்தலிங்கத்தின் அன்பு மனைவியும் தையல்நாயகி, நடராசா, சிவஞானம், கந்தசாமி, ரெத்தினம், ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற சண்முகம், மரகதம் ஆகியோரின் சகலியும் சறோசா, இளங்கோ (டென்மார்க்), இளங்கோதை, இளந்திரையன், காலஞ்சென்ற இளமுருகன், உதயராணி, காலஞ்சென்ற தவராணி ஆகியோரின் அன்புத் தாயும் பன்னீர்ச்செல்வம், தங்கேஸ்வரி (டென்மார்க்), சிவபாதம், உதயகுமாரி, ஸ்ரீதர் ஆகியோரின் அன்பு மாமியும் சகுந்தலா, சதீஸ்குமார் காலஞ்சென்ற குமுதா மற்றும் விஜயகுமார், கஜன், கஜந்தா (டென்மார்க்), சசிகலா, விஜயகலா, சிவசுதன், சிவன்யா, சிவதர்சன், கஜந்தினி, சையிந்தன், கயானா, கயானன், லக்ஷனா, தர்சனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிரவீனா, பிரதீபா, பிரதீஸ், பிரதீபன், பிரியாழினி, காலஞ்சென்ற சபீனா ஆகியோரின் பூட்டியமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை அவரின் இல்லத்தில் இன்று (16.05.2006) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு.

தகவல்:
கணவர் சாந்தலிங்கம்.

(50237)(39-32-15-45)

## லாவண்யா மாணிக்கம் (யசோ)



லாவண்யா மாணிக்கம் அவர்கள் நேற்று (15.05.2006) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மாணிக்கம் (அதிபர், யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), சிறீரஞ்சிதமலர் - மாணிக்கம் (செயலாளர்- வலி. வடக்கு பிரதேசசபை, மல்லாகம்) தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் சுகன்யா( மக்கள் வங்கி- பம்பலப்பிட்டி), சகிலேந்திரா (கொழும்பு) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2006) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 614/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.614/3, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0212227525

தகவல்:
வி.மாணிக்கம் (தந்தை)

(50241)(39-32-15-17)

## நீங்காத நினைவில் ஆண்டு ஆறு



**அமரர் சின்னத்துரை சோமசேகரம்**

(ஓய்வூதியர், யாழ்.மாநகரசபை)

திதி: 16.05.2006 செவ்வாய்க்கிழமை
(சங்கடஹர சதுர்த்தி)

ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
எம் இதயங்களில் குடியிருக்கும்
அன்பு நாயகரே! அருமை ஐயாவே! அன்பு மாமாவே!
உங்கள் நினைவுகள் என்றும் எம்மைவிட்டுப் பிரியாது.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம்: 14.07.1930
மறைவு: 22.04.2000

39/2, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## சுற்றுச்சூழலை பாதுகாக்க வாகனம்தரக் கோரிக்கை

தென்மராட்சி,மே16

சாவகச்சேரி நகரசபையினால் மேற்கொள்ளப்படும் சுத்திகரிப்பு மற்றும் குடிநீர் விநியோகம் ஆகிய சேவைகளை மேம்படுத்த வாகனங்கள் பெற்றுத் தருமாறு நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தென்மராட்சி பிரதேச செயலரிடம் கோரியுள்ளார்.

நகரசபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பினை மேற்கொள்ள தின்மும் குப்பை கூழங்களை அகற்றும் பணியினை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

அத்துடன், குடிதண்ணீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு தினமும் பவுஸர் மூலம் நீர் வழங்கவேண்டிய கடப்பாடு நகரசபைக்கு உள்ளது.

இவற்றினை தற்போது சபையில் உள்ள உழவு இயந்திரம் ஒன்றினைப் பெரும் சிரமங்களின் மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது:

இதனால், உழவு இயந்திரம் அடிக்கடி பழுதடைவதால் சபைக்கு பெரும் நிதியிழப்பு ஏற்படுகிறது.

எனவே, சபை எல்லைக்குட்பட்ட மக்களுக்கு நிறைந்த சேவையினை வழங்க மேலும் வாகனங்கள் பெற்றுத்தருமாறு பிரதேச செயலரை கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(117)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 19 - 02 - 1935



ஆண்டவன் அடியில் 06 - 06 - 2004

தெல்லிப்பழை, விமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற உயிரியல் ஆசிரியர்

**அமரர் கந்தையா மகேஸ்பரன்**

அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திதி: 16.05.2006

நெஞ்சிலே உம்மையிருத்தி நினைவுதனில் உம்மை
நிறைத்து என்றென்றும் தங்கள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை
என்றென்றும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


## ஒத்து மாறல்

வவுனியா தெற்கு வலயப் பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் விஞ்ஞான பாட ஆசிரியர் யாழ்ப்பாணத்திற்கு ஒத்து மாற விரும்புகின்றார்.

தொடர்பு: 0776648242

(சி.49274) (39-15-32-45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகப் படுகொலைகள் குறித்த விசாரணைக்கு மக்கள் தயக்கமின்றி ஒத்துழைக்கவேண்டும்

## கண்டன அறிக்கையில் ஈ.பி.டி.பி. வேண்டுகோள்

கொழும்பு,மே16

தீவகப் படுகொலைகள் குறித்த விசாரணைக்கு மக்கள் தயக்கமின்றி ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு அல்லைப்பிட்டி வங்களாவடி, புளியங்கூடல் ஆகிய இடங்களில் குழந்தைகள் உட்பட அப்பாவிப் பொதுமக்கள் 13 பேர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து அக்கட்சி வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசியலுரிமைக்காக எண்ணித் துணிந்து ஏங்கிக்கொண்டிருக்கும் எமது மக்கள் இன்று உயிர் வாழும் உரிமையையும் இழந்து நிற்பதன் அடையாளம்தான் தீவக மக்கள் மீதான கோரப்படுகொலை. கொலைக் கலாசாரத்தின் கோரப்பசிக்கு இளவயதினர், முதியவர்கள் என்றில்லாமல் குழந்தைச் செல்வங்களும் இரையாகிவருவதன் இன்னொரு கொடிய நிகழ்வுதான் தீவகத்தில் நடந்தேறியிருக்கும் மனிதப்படுகொலை.

தீவக மண்ணின் அல்லைப்பிட்டி, புளியங்கூடல், வேலணை ஆகிய இடங் களில் நிகழ்ந்த படுகொலைகள் எமது நெஞ்சைப் பிளந்திருக்கின்றன.

தீவகம் சொல்லித் தீராத சோகங்களுக்கு முகம் கொடுத்த மண், சொல்லியும் ஆறாத வடுக்களைச் சுமந்து நின்ற மண். ஈ.பி.டி.பி. யினராகிய எங்களுக்கு வாழ்வு கொடுத்த மண்ணும் இதுதான். நாங்கள் வாழ்வு கொடுத்த மக்களும் இங்கேதான். துயர் துடைத்தவர்கள் நாங்கள். வடுக்களைப் போக்கியவர்கள் நாங்கள்.

நகமும் தசையும் போல் நாளும் பொழுதும் எங்களுடன் உறவாடிக்கொண்டிருக்கும் தீவக மக்கள் குருதியில் சரிந்து கிடப்பது கண்டு துடிதுடித்து நாங்கள் துயரப்படுகின்றோம்.

மனித உயிர்களை மலிவுச்சந்தையில் வைத்து வியாபாரம் நடத்தும் சுயலாப அரசியலில் சுவை கண்டவர்களுக்கு இந்தப் படுகொலைச் சம்பவங்கள் மகிழ்ச்சியை கொடுக்கலாம்.

மக்களின் உயிரிழப்புக்களை உள்ளூரிலும் சர்வதேசத்திலும் சொல்லியழுது அதில் தங்களது உயிர் வாழ்வை தக்கவைத்து யுத்த எண்ணங்களை பலப்படுத்தும் சக்திகளுக்கு இந்தப் படுகொலைகள் அரசியல் ஆதாயங்களை கொடுக்கலாம்.

ஆனால் யுத்தம் நிறுத்தப்படவேண்டும். அழிவுகளிலிருந்து மக்கள் காப்பாற்றப்படவேண்டும் எனக் கருதி படுகொலைகளை யார் புரிந்தாலும் அவற்றை வன்மையுடன் கண்டித்து வரும் ஈ.பி.டி.பி.யினராகிய எங்களுக்கு இத்தகைய படுகொலைகள் பேரிடியாகவும் பெருந்துயரமாகவும் உள்ளன. ஆண்கள்,பெண்கள் குழந்தைகள் என்று எமது மக்கள் குருதியில் சரிந்து கிடக்கும் துயரப்பொழுதிலும் கூட வழமைபோல் படுகொலைகளுக்கான பழியை ஈ.பி.டி.பியினராகிய எம்மீது சுமத்தும் புலிகளின் பொய்யான கட்டுக்கதைகளும் உலா வருகின்றன.

கறைபடியாத எங்கள் கரங்கள் மக்களின் குறை தீர்க்கும் கரங்களே தவிர, மனிதப் படுகொலைகளில் வெறி தீர்க்கும் கரங்களல்ல என்பது மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் தெரிந்த உண்மை.

பச்சிளம் குழந்தைகள் புரிந்த பாதகம் தான் என்ன...?

அப்பாவி மக்களை குடும்பத்துடன் சாய்ந்துவிட காரணம்தான் என்ன...?

தீவகமக்களை படுகொலை புரிந்தவர்கள் மனச்சாட்சியை அடகுவைத்துவிட்ட மிருகங்களா?

ஏன் என்று கேள்வி எழுப்பும் சுதந்திரத்தையும் பறிகொடுத்துவிட்டு நிற்கும் எமது மக்கள் சார்பில் ஈ.பி.டி.பி. கேள்வி எழுப்புகின்றது.

இந்தப் படுகொலைகளை யார் புரிந்தாலும் அதை ஈ.பி.டி.யினராகிய நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

பதற்றமான சூழலுக்கும் எமது தேசத்தைப் படுகொலைகளமாக தொடர்ந்தும் வைத்திருக்க விரும்பும் சக்திகளின் மக்கள் விரோத செயலை ஈ.பி.டி.பியினராகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். தண்டிக்கப்படவேண்டும். அரசாங்கம் நடத்தவிருக்கும் விசாரணைக்கு மக்கள் தயக்கமின்றி முன்வந்து ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என ஈ.பி.டி.பி. வேண்டுகோள் விடுகின்றது.

படுகொலை செய்யப்பட்ட மக்கள் எமது கட்சியின் நீண்டகால உறுப்பினர்களின் உறவினர்கள்.

எமது உறுதிக்கும் உழைப்புக்கும் உறுதிக்கு உறுதியாக பலம் கொடுத்து நின்ற மக்கள்.

இவர்களுக்கு எமது இறுதி மரியாதையைச் செலுத்துகின்றோம்.

இழப்புக்களின் வேதனையில் வதைபடும் எங்கள் தீவக உறவுகளின் துயரத்தில் ஈ.பி.டி.பி.யும் பங்கெடுக்கிறது.

துப்பாக்கிகள் இலக்குகளாக அப்பாவி மக்களை பலியெடுப்பதை நிறுத்துங்கள்.

குருதியுறைய வைக்கும் மனிதப் படுகொலைகளின் இறுதிப் பலியாக தீவக மக்கள் இருக்கட்டும்.

## கொழும்பில் கண்காணிப்புக் குழு இன்று கூடுகிறது

கொழும்பு,மே16

வடக்கு - கிழக்கு கடல் பிரதேசங்களில் கண்காணிப்புக் குழுவின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக ஆலோசித்து முடிவெடுக்க மேற்படி குழுவின் உறுப்பினர்களின் கூட்டமொன்று இன்று கொழும்பில் நடைபெறவிருக்கின்றது.

வடக்கு - கிழக்கில் பணியாற்றும் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த 57 உறுப்பினர்களையும் ஆலோசனைக் கூட்டமொன்றில் கலந்துகொள்ளவரும்படி அக்குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சன் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

கடந்த வியாழனன்று வெற்றிலைக்கேணிக் கடற்பகுதியில் ஏற்பட்ட சம்ப வத்தையடுத்து இலங்கை போர்நிறுத் தக் கண்காணிப்புக் குழு தனது செயற்பாடுகளை கடற்பிராந்தியத்தில் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. என்றாலும், இந்தக் கண்காணிப்பு செயற்பாடுகளைப் புதிய உத்தி களுடன் முன்னெடுப்பதற்கு உத்தேசிக் கப்பட்டிருப்பதாகக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளார் போல் பிஜோர்க் கூறியுள்ளார்.

இதுபற்றி கண்காணிப்புக் குழுவி னர் இன்றைய கூட்டத்தில் ஆலோசித்து முடிவெடுப்பார்கள் என்று தெரிகின் றது. (ப)

## தென்மராட்சி சங்கத்தில் பெற்றோல் விநியோகம்

தென்மராட்சி,மே16

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் கைதடியில் நடத்தப்படும் எரிபொருள் நிலையம் கடந்த ஜனவரி திறக்கப்பட்டபோதும் கடந்த வாரம் முதலே வாகனங்களுக்கு பெற்றோல் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (117)

## தீவகப் படுகொலைச் சம்பவங்கள் —

# படையினருடன் இணைந்து ஒட்டுப்படையின் கைவரிசை

## ஜனாதிபதிக்கு மாவை சேனாதிராஜா கடிதம்

கொழும்பு,மே16

இலங்கை அரசின் படையினர் கண்மூடித்தனமாக அப்பாவிகளான தமிழ் மக்களைக் கொன்றொழித்திருப்பது அல்லது கொன்றொழிப்பதற்கு ஆதரவாக இருந்து வருவது என்பது இது முதல் தடவையன்று. இம்மாதிரி அப்பாவிகளான தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்படுவது தொடராமல் இருக்கும்வகையில் உடனடியாகப் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண் டும்.

- இவ்வாறு வற்புறுத்தும் அவசரக் கடிதம் ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத் துள்ளார்.

ஊர்காவற்றுறை அல்லைப்பிட்டி யில் இடம்பெற்றுள்ள படுகொலைகள் தொடர்பாகவே மாவை சேனாதிராஜா ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடற்படையினராலும் இராணுவத் துடன் இணைந்து செயற்படும் ஒட் டுப்படைகளினாலும் கடந்த 13ஆம் திகதி மனிதாபிமானமற்ற முறையில் வெறித்தனமாகப் பொதுமக்கள் வதிவிடங்களில் எறிகுண்டுகள் எறிந்தும் கண்மூடித்தனமாகச் சூடு நடத்தியும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் சொல்லுக்கு அடிபணியும் படியாகத் தமிழ் மக்களை அச்சுறுத்து வதற்காகவே இம் மாதிரிவெறியாட்டங்கள் நடத்தப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர்களா கிய நாம் கருதுகின்றோம். இம்மாதிரி சம்பவங்கள் பற்றி நாடாளுமன்றத்தில் பலதடவைகள் எடுத்துக்கூறியுள்ளோம். ஆனால், எதுவித பயனும் ஏற்பட வில்லை.

ஆயுதம்தரித்த ஒட்டுப்படையினர் அரச படைகளுடன் இணைந்து செயற் படுகின்றார்கள் என்பது வெளிப்படை யாகியுள்ளது. இவர்களே படையின ருடன் கைகோர்த்துக் கொண்டு படுகொலைகளையும் தீயிடல்களிலும் ஈடு பட்டுவருகிறார்கள்.

- இவ்வாறு மாவை சேனாதிராஜா தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(ப)


**இளவாலை**

**பத்தாவத்தை,புனித பிலிப்பு நேரியார் ஆலய வருடாந்த திருநாள்**

**17.05.2006 - 26.05.2006**

புனித பிலிப்பு நேரியாரின் வருடாந்தத் திருநாள் வழிபாடுகள் 17.05.2006 மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஒவ்வொரு நாளும் மாலை 5 மணிக்கு திருசெபமாலையும் அதைத் தொடர்ந்து திருப்பலிப் பூசையும் நடைபெறும். 25ஆம் திகதி மாலை 6 மணிக்கு திருச்செபமாலையும் அதைத் தொடர்ந்து திருப்பலிப் பூசையும் திவ்விய நற்கருணைப் பவனியும் நடைபெறும். 26ஆம் திகதி காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலிப் பூசையும் அதைத் தொடர்ந்து புனிதரின் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். புனிதரின் பக்தர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(50249) பங்குத் தந்தை.



**திக்கரை முருகன் ஆலயம்**

**திக்கரை, களபூமி, காரைநகர்**

**மகா கும்பாபிஷேகமும் யந்திர பூசையும் பிற்போடப்பட்டுள்ளது**

சில தவிர்க்க முடியாத காரணங்களால் மேற்படி நிகழ்வுகள் முன்னர் அறிவித்தபடி நடைபெறமாட்டா. பிற்போடப்பட்டுள்ள திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

- ஆலய அறங்காவலர்.

(50248)



**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்

பீட்டர் றிட்சஸ்சனின்

**கிங் - கொங்** King Kong

தங்கத் தமிழ் மொழியில்

(பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை)

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30

**ராஜா** யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

பரத், மல்லிகா கபூர் நடித்த

**அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது**

10.30, 2.30, 6.30, 9.30 முற்பதிவு செய்துகொள்ளலாம்

**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்று முதல்

தனுஸ், சாயாசிங் நடித்த

**திருடா திருடி**

காட்சி நேரம் : 10.30, 2.30


## மரண அறிவித்தல்

### முருகேசு பொன்னம்பலம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பொன்னம்பலம் நேற்றுமுன்தினம் (14.05.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் முருகசு - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் தங்கம்மாவின் அன்புக் கணவரும் சின்னத்தம்பி - நாகம்மா தம்பதியரின் மருமகனும் கனகலட்சுமி, மகாலட்சுமி, அமிர்த லிங்கம், விஜயலட்சுமி (அமரர்), நிர்மலாதேவி (ஆசிரியர்), மகாலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமி, சண்முகராசா, சுசீலாதேவி, சிவராசா (அமரர்), அருமைநாதன் (ஆசிரியர்), வாசுகி (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் அமரர்களான வைத்திலிங்கம், சின்னத்துரை, செல்லையா ஆகியோரின் சகோதரனும் அழகரத்தினம், சரஸ்வதி, முருகையா (அமரர்), கணேசமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் அகிலன் (நோர்வே), மணிவண்ணன் (ஆசிரியர்), பார்த்திபன், அனுசியா, அஜந்தா, கஜபரன், தனுஜா, நாகசசி, நவநீதன், அமுத ரூபி, அமிர்தகரன், சுகிர்தா, கோகிலா, தர்மினி, றமா, தர்சிகா, கண்ணதாசன், சர்மிளா, ஆகண்யா, சண்முகப்பிரியுன், பவித்திரன், பவதா, ருக்ஷா ஆகியோரின் பேரனும் துளசிகா வின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2006) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொந்தனை வீதி,*
*மல்லாகம்.*
*தொ.பே. 021 4591813*

(50245)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ ரீதியான தீர்வை நாடுகின்றவர்கள் கடந்த காலத்தைத் திரும்பிப்பார்க்க வேண்டும்

## புதிய பிரிட்டிஷ் தூதர் தெரிவிப்பு

கொழும்பு,மே16

இராணுவ நடவடிக்கைகள் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டுவிடமுடியும் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்துவோர். 1980, 1990 ஆம் ஆண்டுகளை திரும்பிப் பார்க்க வேண்டும் என்று புதிய பிரிட்டிஷ் தூதுவராக இங்கு பதவியேற்றுள்ள டொமினிக் சில்கொற் நேற்று வலியுறுத்திச் சொன்னார்.

புதிய பிரிட்டிஷ் தூதுவராக இலங்கையில் நியமிக்கப்பட்ட டொமினிக் சில்கொற் நேற்றுமுதல் தடவையாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து உரையாடினார்.

இந்த உரையாடலின் பின்னர் அவர் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லமான 'வெஸ்ட் மினிஸ்டர்' வளவில் தூதுவரை வரவேற்கக் கூடியிருந்த பிரிட்டிஷ் தூதரக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றினார்.

தூதுவர் டொமினிக் சில்கொற் தமது உரையில் கூறியதாவது:-

நம்பிக்கையை பரஸ்பரம் கட்டிவளர்ப்பதன் மூலமும், ஒருவரை ஒருவர் மதித்து நடப்பதன் மூலமும், கூட்டு ஒத்துழைப்பு மூலமும் இந்த நவீன உறவைக் கட்டி வளர்க்க முடியும் என்பது எனது நம்பிக்கை. எமது முயற்சிகள் பொது இலட்சியத்தை நோக்கியதாக இருக்கவேண்டும்.

எங்கள் இரு நாடுகளுக்குமிடையிலான நவீன நடைமுறைகள் என்னவாகவிருக்கும்? ஆறு அங்கங்களைக் கொண்டதாக அது விளங்குகிறது.

அதில் முதலாவது, இந்த நாட்டில் சமாதானத்தை மலரச் செய்வதற்கு எல்லோரும் சேர்ந்து ஒத்துழைப்பதாகும்.

இந்தப் பொறுப்பு இலங்கை மக்களாகிய உங்களுடையது. மக்களாகிய நீங்கள்தான் சாதனையில் காட்டவேண்டும். வெளியார் எவராலும் சமாதானத்தைக் கொண்டுவர முடியாது.

ஆனால், இந்த வெளியார் நாட்டில் சமாதானம் மலர்ந்து நிலை பெறுவதற்கு வேண்டிய சூழ்நிலைகளை உருவாக்கமுடியும். எனவே, சமாதானத்தை மலரச்செய்வதற்கான நடவடிக்கைகளுக்கும், சூழ்நிலைகளை உருவாக்குவதற்கும் நாங்கள் எங்கள் மனப்பூர்வமான ஆதரவை, தொடர்ந்தும் வழங்கிவருவோம். உதாரணத்துக்கு இங்கு ஒன்றைச் சொல்லலாம். அதாவது நாங்கள் எங்களது ஆதரவை, அனுசரணையாளர்களான நோர்வேக்கும், இலங்கை கண்காணிப்புக் குழுவினருக்கும் வழங்கலாம். விடுதலைப் புலிகளும், அரசும் கேட்டுக் கொண்டதாலேயே இவுர்கள் இருதரப்பாரும் இங்கு இருக்கிறார்கள்.

இராணுவத் தளபதி மீதான தற்கொலைக் குண்டுத் தாக்குதல் அல்லது யாழ்ப்பாணம் 'உதயன்' பத்திரிகைக் காரியாலயம் மீதான தாக்குதல்கள் போன்ற பயங்கரவாத, காடைத்தனமான வன்முறைச் சம்பவங்கள் என்பன கண்டனத்துக்குரியன.

இலங்கைக்கான எமது நாட்டின் உதவித் தொகை, கடன் நிவாரணத்துக்கு ஒதுக்கப்பட்ட 8 கோடி பவுணைத் தவிர ஏனையவை சமாதானத்தை கட்டிவளர்ப்பதற்காகவே பயன்படுத்தப்படும்.

இலங்கையின் பிரச்சினைகளுக்கு வன்முறைகள் மூலம் தீர்வைக்கண்டுவிட முடியாது.

இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வைக் காணலாம் என்று நினைத்து செயல்படுபவர்கள் 1980, 1990ஆம் வருடகாலக் கண்ணாடியைத் திருப்பிப்பார்க்கவேண்டும். பெரும்பாலான நாட்டு மக்கள் அப்படியான ஒரு காலம் மீண்டும் வருவதை விரும்பமாட்டார்கள் என்பது எனது நம்பிக்கையாகும்.

நவீன உறவின் இரண்டாவது அம்சம், எமது இரு நாட்டு மக்களுக்கிடையிலான தொடர்புகளை விருத்தி செய்வதாகும் மூன்றாவது அம்சம் வர்த்தக அபிவிருத்தியாகும்.

நாலாவது, பிரிட்டிஷ் இராணுவத்துக்கும் இலங்கை இராணுவத்துக்கும் இடையிலான உறவை வளர்ப்பது. ஐந்தாவது, இலங்கையில் வாழுகின்ற பிரிட்டிஷ் பிரஜைகளின் நலன்களைப்பேணுதல். ஆறாவது பிரிட்டிஷ் உல்லாசப் பயணிகளின் நலன்கள் என்பனவாகும். - இவ்வாறு தூதுவர் பேசினார். (க)

## அமெ. அதிகாரி இன்று வருகை

கொழும்பு,மே16

சமாதான முன்னெடுப்புகள் ஸ்தம்பிதமடைந்து முழு அளவிலான யுத்தமொன்று வெடிக்கலாம் என்று அச்சம் ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில் அமெரிக்காவின் சிரேஷ்ட அரசாங்க அதிகாரி ஒருவர் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று இலங்கை வருகிறார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதி உதவிச் செயலாளரான டொனால்ட் கம்ப் இன்று இலங்கை வருகிறார்.

டொனால்ட் கம்ப்பின் இந்த விஜயத்தின் போது அவர் அரசாங்க உயர் அதிகாரிகள், அரசியற் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தக சமூகத்தினர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்துவார் எனத் தெரிகிறது.

இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட இரு தரப்புக்களும் அமைதிப் பேச்சுகளை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இணைத்தலைமை நாடுகள் எடுத்துவரும் முயற்சிகளில் ஒன்றாகவே அமெரிக்க அதிகாரியின் இந்தத் திடீர் விஜயத்தை நோக்கவேண்டும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. (க)

## வெடிபொருள் மீட்பு

வவுனியா ஈரற்பெரியகுளத்தில் நேற்றுக் காலை சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த பொலீஸார் லொறியொன்றிலிருந்து ஒரு தொகை வெடிமருந்துப் பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பிலிருந்து - மன்னார் நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறியொன்றை ஈரப்பெரியகுளத்தில் சோதனையிட்ட பொலீஸார் அதிலிருந்து 270 ஜெலிக்னைட் குச்சிகளை மீட்டுள்ளனர்.

இவை என்ன காரணத்திற்காக கொண்டு செல்லப்படவிருந்தன என்பது பற்றிய விவரம் உடனடியாகத் தெரியவரவில்லை. லொறியின் சாரதியைக் கைதுசெய்துள்ள பொலீஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன. (க)

## வடக்கு – கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்: முடிவு எடுக்க இன்று உயர்மட்டக் கூட்டம்

கொழும்பு,மே16

வடக்கு - கிழக்கில் கடந்த பெப்ரவரி முதல் ஆறு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அந்தக் காலம் முடிவடையும்போது நடத்துவதா, இல்லையா என்பது குறித்தான தீர்மானமொன்று இன்று எடுக்கப்படவுள்ளது. இந்த விடயம் தொடர்பில் இன்று தேர்தல்கள் செயலகத்தில் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தலைமையில் விசேட கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளது. வடக்கு - கிழக்கு மாகாண அரச அதிபர்கள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடக்கு - கிழக்கின் தற்போதைய பாதுகாப்பு நிலைமை மற்றும் அங்கு தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்புகள் ஆகியன குறித்து இன்றைய பேச்சுகளின்போது விரிவாக ஆராயப்படவுள்ளது. பெரும்பாலும் வடக்கு - கிழக்கின் உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் மீண்டும் ஒத்திவைக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. (க)

## 'குமுதினி' படுகொலைகள் நினைவுதினம் நெடுந்தீவில் நேற்று அஞ்சலி நிகழ்வுகள்

நல்லூர்,மே16

'குமுதினி' படகு படுகொலைகளின் 21 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி நெடுந்தீவு துறைமுகத்தில் உள்ள நினைவாலயத்தில் நேற்று விசேட அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

படுகொலையில் தமது உறவுகளை இழந்தவர்கள் உட்பட பொதுமக்கள் திரண்டு வந்து மலர் தூவி அஞ்சலியைச் செலுத்தினார்கள்.

நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு அருள்நேசன் அடிகளார் திருப்பலிப் பூசையை ஒப்புக்கொடுத்தார்.

அதைத் தொடர்ந்து நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபையில் அருட் திரு ஜோன் செல்வம் உயிர் நீத்தவர்களின் நினைவாக ஆராதனைகளை நடத்தினார்.

நண்பகர் 12 மணிக்கு மேற்கு நெழுவினி விநாயகர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. (111)

## மூதூரில் ஒருவர் வெட்டிக்கொலை

மூதூர், மே16

மூதூர் 35ஆம் கட்டைப் பிரதேசத்தில் நேற்று ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பாண் விநியோகத்தில் ஈடுபட்டுவந்த 35 வயதுடைய அப்துல் ரசூல் என்பவரே தனது தொழிலுக்குச் சென்றுகொண்டிருந்தபோது வெட்டிக்கொல்லப்பட்டுள்ளார். மூதூர் பொலீஸார் விசாரணைகளை நடத்திவருகின்றார். (க)

## கரவெட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக படைத்தரப்புத் தெரிவித்தது.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து நெல்லியடி நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் உட்பட அப்பகுதி கடைகள் அனைத்தும் மூடப்பட்டு, அப்பிரதேசம் மக்கள் நடமாட்டமற்று வெறிச்சோடியது. சிறிது நேரத்தின் பின்பு மீண்டும் வழமை நிலை திரும்பியது. (க-14-15-70-86-173-190)

## தீவுப் பகுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதால் மக்கள் இப்படுகொலைகள் தொடர்பாக சுதந்திரமாகச் சாட்சிமளிக்க அஞ்சுகின்றனர் என்றும் நீதிவான் பிரதிப் பொலீஸ்மா அதிபரின் கவனத்துக்குக்கொண்டு வந்துள்ளார்.

அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் பகுதியைச்சேர்ந்த பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் செல்லவிரும்புகின்றனர். அவர்கள் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் செல்ல அவர்களுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் பிரதிப் பொலீஸ்மா அதிபரைக் கோரினாார் எனத் தெரிகின்றது.

மக்கள் தற்சமயம் இடம்பெயர்ந்து வாழும் அல்லைப்பிட்டி பிரதேசத்துக்குப் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்றும் நீதிவான் கோரியுள்ளார். (க)

O/L
DAY CLASS
பிரிவு !
ஆரம்பமாகிவிட்டது.
அனுமதிகள்
அலுவலகத்தில்
யூனிவேர்சல்
யா/ இந்து மகளிர்
கல்லூரி அருகே.
A/L 2008
கலை, வர்த்தக
பிரிவுகள்
ஆரம்பமாகிவிட்டன.

## அக்கரைப்பற்றில் கிரனேட்வீச்சு

கொழும்பு,மே16

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்று பிரதேசசபைத் தேர்தல் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் எம்.ஹக்கீமை இலக்குவைத்து நேற்று கிரனேட் தாக்குதல் ஒன்று இடம்பெற்றிருக்கிறது.

இதில் குறித்த வேட்பாளர் உட்பட 9 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்றுமாலை ஆறு மணியளவில் பள்ளிக்குடியிருப்பில் இடம்பெற்றுள்ளது.

கிரனேட் வீசினார் எனத் தெரிவிக்கப்படும் நபரை முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் மடக்கிப் பிடித்து நையப்புடைத்த பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் என்றும் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராகத் தேர்தலில் போட்டியிடும் அணியினரே கிரனேட் தாக்குதலை நடத்தினர் என்றும் தகவல்கள் தெரிவித்தன. (க)

## இராணுவத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலத்தில் விழுந்ததையும் கண்டேன். அதே நேரத்தில் பாரிய சத்தமொன்றுடன் குண்டு வெடித்தது.

எனக்குக் கடுமையான காயங்கள் ஏற்பட்டன. இருந்தாலும் ஒருவாறு சுதாகரித்துக் கொண்டு நான் காருக்கு வெளியே வந்து நின்றேன். வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு அனுமதிக்கப்படும் வரை எனக்கு சுயநினைவு இருந்தது.

இப்போது உடம்பில் காயங்கள் இருக்கின்றன. அவை ஆறியவுடன் மருத்துவர்களின் ஆலோசனையைப் பெற்று நான் கடமைக்குத் திரும்புவேன். மூன்றுவாரங்களுக்குள் கடமைக்குத் திரும்பலாமென்று எதிர்பார்க்கின்றேன்.

- இவ்வாறு கூறினார் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் பொன்சேகா. (க)

## இணைத் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாதக் கடைசியில் டோக்கி யோவில் நடைபெறும் டோக்கியோ நன்கொடை நாடுகளின் மாநாட்டில் சௌகரியமான முறையில் இந்தியா பங்குபற்றக் கூடிய முறையில் மாநாட்டு நடைமுறைகள் இந்தியாவுக்குப் பிடித்தமான முறையில் வகுக்கப்பட்டிருக்கும் என்றும் ஜப்பானிய சிறப்புத் தூதுவர் தெரிவித்திருந்தார்.

இதுபற்றி புதுடில்லி வட்டாரங்களிடம் பிரஸ்தாபித்த பொழுது அவர்கள், "இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியாவின் கொள்கையில் எதுவித மாற்றமும் கிடையாது. அதாவது இப்பொழுது போல - நேரடியாக சம்பந்தப்படாமல் செல்வாக்கைப் பிரயோகிப்பது என்ற கொள்கையையே கடைப்பிடித்து வருவோம்." - என்று சொல்லியிருக்கின்றனர்.

இதேவேளை, புதுடில்லியின் கவனத்தை ஈர்த்துள்ள இன்னொரு விஷயம், இனப்பிரச்சினையை மேலும் சர்வதேச மயப் படுத்தாமல் இருக்கும் கொள்கையை இலங்கை ஜனாதிபதி கடைப்பிடிக்க விரும்புகிறார். எனவே, இந்த நிலையில் இலங் கையின் சமாதான முயற்சியில் இந்தியாவின் கூடுதல் பங்களிப்பும் அவர் எல்லைக்குள்ளேயே இருக்கமுடியும் என்றும் புதுடில்லி வட்டாரங்கள் கருதுகின்றன. (க)

## 11ஆவது நாளாக பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம்,மே16

குடாநாட்டில் பொது மக்களுக்கு எதி ராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் பதினொராவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

போராட்டத்தால் குடாநாட்டின் அரச நிர்வாகச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன பாடசாலைகள், அரச திணைக்களங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் யாவும் முற்று முழுதாகத் தமது செயற்பாடுகளை இடைநிறுத்தியிருந்தன.

இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் மினிபஸ்களின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெற்றன. வங்கிகள் ஒரு மணி நேரம் அத்தியாவசிய சேவைகளை மட்டும் வழங்கின.

## கடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்தில் படுத்திருந்த 8 இளைஞர் கள் இவ்வாறு காணாமற் போனார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரையில் தெரியவரவில்லை. அந்த நிலையில் தற்போது இந்த இரு இளைஞர்களும் காணாமற்போயுள்ளனர்.

இவர்கள் இருவரும் காணாமற்போயுள்ளமை தொடர்பாக அவர்களது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நிலாவரைச் சந்தியில் உள்ள நீலகிரி ஹோட்டல் உரிமையாளரான ஜெயரட்ணம் ஜெயந்தன் (வயது - 25) மற்றும் சிவன் பல்பொருள் விற்பனை நிலைய உரிமையாளரான தியாகராஜா கிருபாகரன் (வயது - 27) ஆகிய இருவருமே காணாமற்போயுள்ளனர். இவர்கள் நவக்கிரி யைச் இடத்தைச் சேர்ந்தவர்கள்.

ஒரே கடையில் இருவரும் நேற்றுமுன் தினம் இரவு படுத்திருந்தனர் என்று சாட்சிகள் கூறுகின்றனர். காலையில் எவரும் இல்லாத நிலையில் கடை திறந்து கிடப்பதைக் கண்ட அயலவர்கள் உள்ளே சென்று பார்த்துள்ளனர். அங்கே இருவரையும் காணாதது மட்டுமன்றி தரை முழுவதும் இரத்தம் பரவிக் காய்ந்து கிடந்துள்ளது.

இருவருக்கும் என்ன நடந்தது என்ற விவரம் இதுவரை தெரியவரவில்லை. அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் அப்பகுதி மக்களிடம் ஏற்பட்டுள்ளது. (க-11-14-15-86-190)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ரக 'டைட்டான்' கடிகாரங்கள் இலங்கைச் சந்தையில் அறிமுகம்




'டைட்டான்' நிறுவனத்தின் சர்வதேச வர்த்தகத்திற்கான பிரதம வர்த்தக நடவடிக்கை அதிகாரி எஸ். ரவிகாந்த், கொழும்பில் இடம்பெற்ற 'டைட்டான்' அறிமுக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

இந்தியாவின் இந்த நூற்றாண்டின் பத்துப் பெரிய உற்பத்திகளுள் ஒன்றான 'டைட்டான்' கடிகாரம் கொழும்பில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் நவீன மோஸ்தர்களினாலான இவை ''தொழில் செய்யும் போது அணியக் கூடியவை'' என்ற முத்திரையோடு அறிமுகமாகியுள்ளன. 'ஹேலீஸ்' நுகர்வோர் உற்பத்திகள் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தோடு (HCPL) இணைந்து இந்தப் புதிய உற்பத்திகள் அறிமுகமாகியுள்ளன.

புத்தாண்டுக் கொண்டாட்டக் காலப் பகுதியில் அறிமுகமாகியுள்ள ''டைட்டான் வோல்ஸ்ட்ரீட்'' உற்பத்திகள் துருப்பிடிக்காத உருக்கில் தயாரிக்கப்பட்டவை. 150 இற்கும் மேற்பட்ட வடிவங்களில் ஆண்களுக்கும், பெண்களுக்குமாக இவை தயாரிக்கப்பட்டுள்ளன. ''புதிய வேலைக் குறியீடு'' என இந்த வடிவங்களுக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

பாரம் குறைந்த தட்டையான இந்தக் கைக் கடிகாரங்கள் கம்பனி உலகின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல வர்ணங்களிலும் தோல் பட்டிகளுடன் கூடியதாகவும் கிடைக்கக் கூடியதாக உள்ளன. நேரம் தவறாமையைத் தமது குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றவர்களுக்கு விஷேட பல்வகை செயற்பாடுகளைக் கொண்ட கைக் கடிகாரங்களும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அதி உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய 'அனலொக் - டிஜிட்டல்' செயற்பாடு, மிதக்கும் 'டிஜிட்டல்' காட்சி என பல்வகைப் பண்புகளுடனும் கூடிய கைக் கடிகாரங்களும் அறிமுகமாகியுள்ளன.

கொழும்பில் விநியோகஸ்தர்கள் மத்தியில் இவற்றை அறிமுகம் செய்து பேசிய 'டைட்டான்' நிறுவனத்தின் சர்வதேச வர்த்தகத்துக்கான பிரதம செயற்பாட்டு அதிகாரி எஸ். ரவிகாந்த், ''ஹேலீஸ் கூட்டு நிறுவனத்துடனான ஒரு வருடப் பங்குடைமையைக் கொண்டாடும் வகையில் 'டைட்டான் வோல் ஸ்ட்ரீட்' உற்பத்திகள் அறிமுகமாகின்றன. இந்தக் காலப் பகுதியில் இலங்கையில் மிகச் சிறப்பாக விற்பனையாகும் மூன்று வகைக் கைக்கடிகாரங்களுள் டைட்டானும் இடம்பிடித்துள்ளது. அதி உயர் இடத்தை இலக்காகக் கொண்டு நாம் பணிபுரிகின்றோம்.'' - என்று கூறினார்.

''இன்றைய கம்பனிகள் உலகின் ஜாம்பவான்களாக நிர்வாகிகளை, அவர்களது 'ஸ்டைல்' என்பனவற்றைக் கருத்தில் கொண்டு 'வோல் ஸ்ட்ரீட்' உற்பத்திகள் அமைந்துள்ளன. இந்தப் பிரிவினர்தான் தாம் தொழில் புரியும் இடங்களில் மற்றவர்கள் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள்.'' - என்றும் அவர் கூறினார்.

இன்று நாட்டிலுள்ள இளைய தொழில் சார் வல்லுநர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. குறிப்பிட்ட தேவைகளை மனதிற் கொண்டு வடிவமைக்கப்பட்ட பொருள்களே இவர்களுக்குத் தேவைப்படுகின்றன. இந்தத் தேவையை 'வோல் ஸ்ட்ரீட்' உற்பத்திகள் பூர்த்தி செய்கின்றன.

HCPL பணிப்பாளர் புவார்ட் சாய்புகண்டு பேசுகையில், ''தனது உள்ளூர் வர்த்தகப் பிரிவில் தலைமைத்துவம் வகிக்க வேண்டும் என்பதே 'ஹேலீஸ்' வர்த்தகக் குழுவின் கொள்கையாகும். கைக் கடிகார வர்த்தகத்துக்கு நாங்கள் புதியவர்கள். ஆனால், ஏற்கனவே நாம் நீண்ட தூரம் வந்து விட்டோம். இன்னும் மிக நீண்ட நாள் செல்லு முன் நாம் முதலாம் இடத்துக்கு வந்து விட்டோம்.'' - என்று உறுதியளித்தார்.

'டைட்டான் வோல் ஸ்ட்ரீட்' உற்பத்திகளின் வருகை மூலம் இலங்கையில் 'டைட்டான்' கைக் கடிகார வகைகள் கணிசமாக அதிகரித்துள்ளன. இதில் ஏனைய உற்பத்திகள் 'பாஸ்ட் டிரக்', 'ராகா' மற்றும் 'ராஜாலியா' என்பனவாகும்.

இவற்றின் விலைகள் நான்காயிரத்துக்கும் 14 ஆயிரத்துக்கும் இடைப்பட்டவை. 'டைட்டான்' பிரத்தியேகக் காட்சியறைகள், 'ஹேலீஸ்' நுகர்வோர் காட்சியறைகள் மற்றும் நாடு முழுவதும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட 'டைட்டான்' காட்சியறைகளில் டைட்டானின் ஏனைய உற்பத்திகளோடு 'வோல் ஸ்ட்ரீட்' உற்பத்திகளும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

'டாட்டா' கூட்டு நிறுவனத்தின் ஒரு உறுப்பினரான 'டைட்டான்' நிறுவனம் கைக் கடிகாரங்கள் மற்றும் ஆபரண உற்பத்தியில் உலகில் மிகப் பெரிய ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனங்களுள் ஒன்றாகும். இன்றுவரை, 7 கோடி 50 லட்சத்துக்கும் அதிகமான கடிகாரங்களை அது விற்பனை செய்துள்ளது. எல்லா 'டைட்டான்' கடிகாரங்களும் இரண்டாண்டு சர்வதேச உத்தரவாதத்துடன் கிடைப்பவை. ✱








Scooty pep+

TVS லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
757, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14.
தொலைபேசி: 4614746 ஃபெக்ஸ்: 4614906
நகரக் காட்சியறை: 100, ஹைட்பார்க் கோனர், கொழும்பு 02.
தொலைபேசி: 4797250


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'Construct - 2006' கண்காட்சி



கட்டடத் தொழில் தொடர்பான இலங்கையின் மிகப்பெருங் கண்காட்சி "Construct 2006' எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதிவரை கொழும்பில் சர்வதேச பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி. மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

புகழ்பெற்ற இந்த வருடக் கண்காட்சி 6ஆவது வருடமாக இலங்கை தேசிய கட்டட சங்கத்தால் (NCASL) சங்கத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டங் களையும் இலங்கை கட்டடத்தொழிற் துறையின் சாதனைகளையும் உள்ளடக்கியதாக ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. இத்துறையின் நிபுணத்துவத்தி லும், தொழில்நுட்பத்திலும் ஏற்பட்டுள்ள முன்னேற் றங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகை யில் கட்டடத்துறையின் எல்லா அம்சங்களையும் 'Construct 2006' கண்காட்சி ஒரே கூரையின்கீழ் கொண்டுவரவுள்ளது.

எதிர்காலக் கட்டடக் கலையின் போக்கையும் அதி நவீன பொருட்களையும் சேவைகளையும் கட்டுமாணம் செய்பவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் விற்பனையாளர்களின் அதிநவீன இயந் திரங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் பகுதி யையும் 250 சிறு கடை பகுதிகளையும் 'Construct 2006' கண்காட்சி கொண்டிருக்கும்.

'Construct 2006' கண்காட்சி இத்துறையின் மிக முக்கிய நிறுவனங்களையும், கொள்வனவாளர் களையும் பொது மக்களையும் கவர்ந்திழுக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. கடந்த வருடத் தைவிட இம்முறை அதிகமான வெளிநாட்டு நிறுவனங்கள் இக்கண்காட்சியில் பங்கு வகிக் கின்றன.

கட்டடக் கண்காட்சி 2006, கட்டடக் கண்காட்சி 2006 தலைவர் மஹானாம ஜயமான தலைமை யின்கீழ் இம்முறையும் பல விசேட அம்சங்க ளுடன் நடைபெறவுள் ளது. குறிப்பாக 2005ஆம் ஆண்டு நடைபெற்றதை விட இம்முறை மேல திக நிறுவனங்களுடன் இணைந்து இந்தக் கண் காட்சியை நாம் மிக விசேடமாக நடத்த வுள்ளோம்.

குறிப்பாக, Lighting Asia நிறுவனம், A.R.Con நிறுவனம், வீட்டு அலங்கார நிறுவ னம், hardware நிறு வனம் ஆகியவற்றுட னும் வீட்டு இயந்தி ரங்கள், தளபாடம் மர வேலைப்பொருள் போன்ற பல மேலதிக நவீன அம்சங்களுடனும் கட்டடப் பொருட்கள் நிர்மாணத்துடனான இயந் திரங்கள் ஆகியவற்றுடனும் இக்கண்காட்சியை மெருகூட்டப்படவுள்ளது.

கடந்த வருடத்தை விட பாரிய முறையில் இக்கண்காட்சியை விரிவு படுத்தக் கூடியதாக இவ் வருடத்தின் நிர்மாணம் 2006 அமையப்பெறு வது குறிப்பிடத்தக்கதாகும்.

இதில் முக்கியமாகக் குறிப்பிடக் கூடியது எது வெனில், இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட் டுள்ள உலக தரத்திலான பொருட்களும், சேவை களும், தொழில்நுட்பமும் சேர்ந்து நவீன முறை களுக்கமைய உற்பத்தி செய்யக்கூடிய சந்தர்ப்ப மாக அமையப்பெற்றிருப்பதாகும்.

இலங்கையில் முதல் தடவையாக நடை பெறும் இந்த நிகழ்ச்சி முக்கியத்துவம் வாய்ந்த தாகும். அதன் மூலம் ஏராளமான உற்பத்திப் பொருட் களை வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத் தக் கூடியதாய் உள்ளதும் ஒரு முக்கியத்துவமா கும். இதன்போது இவ்விடத்தில் விரிவுபடுத்தல் முக்கியத்துவமாய் அமைந்தது. அத்தோடு முதன் முறையாக உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுவோ ருக்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும்.

NCASL நிறுவனத்தின் வெள்ளி விழாவை ஒட்டி இந்நிகழ்வானது நடைபெறுகின்றது. ஜயமான கூறியது போல் கண்காட்சியின்போது கூடிய பலன் பெறக்கூடியதாவுள்ள 25 ஆண்டு அனுபவத்தைக் கொண்டே இந்நி வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கும் மற்றும் ஏனைய துறையில் ஈடுபடுவோருக்கும் இது ஓர் அரிய சந்தர்ப்பமாக அமையவிருப்பது விசேட அம்சமாகும். ✱

# பொருளாதார வளர்ச்சிப் பாதையில் சீனாவை விஞ்சுகிறது இந்தியா



இந்தியா பொருளாதார வளர்ச்சியில் சீனாவை நெருங்கி வருகிறது என இந்தியா தெரிவித் துள்ளது.

இப்போது இந்தியாவுக்கும், சீனாவுக்கும் தான் எல்லா வகையிலும் போட்டி நிலவுகிறது. சீனா, எல்லா வகையிலும் இந்தியாவை பின்னுக்குத் தள்ளி விட்டாலும், போகப் போக இந்தியாவின் வளர்ச்சி மகத் தானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த 10 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தி யாவின் வளர்ச்சியை சீனா சமாளிக்க முடியாமல் திணறும் என்று பலவகையிலும் அறிகுறிகள் தென்படத் துவங்கி விட்டன. இந்த வகையில் உற்பத்தி, தொழிலாளர்கள் உழைப்பு, தொழிலாளர் ஊதிய உயர்வு ஆகியவற்றில் சீனா, இப்போதே தளர்ந்து வரும் நிலை காணப்படுகிறது என்று உலக வங்கியின் சார்பில் எடுக்கப்பட்ட உலக வளர்ச்சி குறித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது, சீனாவில் தொழி லாளர்களின் உற்பத்தி சார்ந்த உழைப்புக்கு ஊதியம் கடந்த 1980ஆம் ஆண்டில் இருந்து 1999 வரை கணக்கீட் டால், 54.4 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேசமயம், ஒரு தொழிலாளர் உற்பத்தி சார்ந்த உழைப்புத் திறனைப் பொறுத்த வரை 5.7 சதவீதம் குறைந்துள்ளது.

இந்த வகையில் இந்தியாவில் உற்பத்தி என்று எடுத்துக் கொண் டால், இதே காலகட்டத் தில், 47.9 சதவீம் அதி கரித்துள்ளது. தொழி லாளர் ஊதியம், இந்தி யாவிலும் உயர்ந்துள் ளது என்றாலும், 15.1 சதவீதத்துக்கு மேல் போகவில்லை. இந்தி யாவை விட சீனாவில் தொழிலாளர் ஊதியம் 60 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத் தக்கது.

அதுபோல், உற்பத்தி வேகத்திலும், சீனா, லேசாக சரியத்துவங்கி உள்ளது. சீனாவில் தொழிலாளர் களிடம் திறமைக்குறைவு என்று பார்த்தால், அதன் சதவீதம் 30.7 சதவீதமாக உள்ளது. அதே நிலையில் இந்தியாவில் இந்த சதவீதம் 12.5 சதவீதம்தான். இப்போது திறமைவாய்ந்த தொழிலாளர் வர்க்கத்தை உருவாக்குவதில் தீவிரமாக இந்தியா ஈடுபட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு உலக வங்கி ஆய்வு தெரிவிக்கிறது. இதுகுறித்து தேசிய பொருளாதார ஆய்வு கவுன்சின் வல்லுநர் பசந்த் பிரதான் கூறுகையில்; 'சீனா வேகமாக உற்பத்தி சார்ந்த வளர்ச்சியை இழக்க வேண்டிய நிலை உருவாகிக் கொண்டி ருக்கிறது. உற்பத்தி, உற்பத்தி செய்யும் தொழி லாளர்கள், அவர்களின் ஊதிய செலவு, திறமை என்று எல்லாவற்றிலும் இந்தியாவுக்குச் சாதக மாக உள்ளது என்பதால், சீனாவைப் பின்னுக்குத் தள்ளுவது காலத்தின் கட்டாயம்' என்றார். ✱

உங்கள் பற்களை விரல்களினால் துலக்குங்கள்




சிறிதளவு சுமுது பற்பசையை உங்கள் விரல்களில் எடுங்கள்



ஐந்து நிமிடங்களுக்கு மேல் முரசை கீழ்புறமாகவும் கீழ்முரசை மேற்புறமாகவும் அழுத்தி தேய்க்கவும். உள்முரசையும் மேற்கூறியவாறு செய்யவும ஒவ்வொரு இரவும் சுமுது பற்பசையை பாவித்து உறுதியான பற்களை பெறுங்கள்.




நாள்தோறும் சுமுது பாவிப்பதன் மூலம் பற்காவி, முரசுகரைதல், பல்லாடுதல், வாயில்துர்நாற்றம் வீசுதல் என்பவற்றை தடுக்கலாம

சுமுது ஆயுர்வேத பற்பசை
சுமுது பற்பசையை பாவித்து பற்கள், முரசைப் பாதுகாக்கவும்

சித்தாலேப ஆயுர்வேத வைத்தியரின் ஆராய்ச்சிப்பிரிவின் கண்டுபிடிப்பு

ஹெட்டிகொட இண்டஸ்ரீஸ் (பிரை) லிமிட்.
33/3, ஸ்ரீ தர்மராம வீதி, இரத்மலானை, இலங்கை. தொலைபேசி: 2736910 தொலைநகல்: -2735465
வனிக்கா மெடிக்கல்ஸ்,
இல. 55, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொபே: 021 222 6291, 021 222 2445



# இந்திய அசோக் லேலண்ட் நிறுவனம் வாகன உற்பத்தியில் துரித வளர்ச்சி

அசோக் லேலண்ட் நிறுவனம் வாகன உற்பத் தித் துறையில் அனைத்துப் பிரிவுகளிலும் நாடு தழுவிய வளர்ச்சியை அடைந்திருப்பதாக அந்நிறு வனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு பொருளாதாரத் துறையில் சாதகமான சூழல் நிலவியது என்றாலும் வாகனத் துறையில் எதிர்பார்த்த வளர்ச்சி ஏற்படவில்லை. எனினும் "அசோக் லேலண்ட் நிறுவனத்தைப் பொறுத்தவரை அனைத்துப் பிரிவுகளிலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு பகுதி மட்டும் அல்லாமல் நாடு தழுவிய அளவில் இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

நிறுவனத்தின் விற்பனை வருவாய் 6 ஆயிரம் கோடியைக் கடந்துள்ளது. நிகர லாபம் ரூ. 330 கோடியை எட்டியுள்ளது.

நிறுவனம், செலவுகளைக் கட்டுப்படுத்து வதன் மூலம் செயல்திறனை அதிகரித்து வருகிறது. பஸ் மற்றும் டிரக் பிரிவில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய வாகனங்கள் அமோக வரவேற்பைப் பெற் றுள்ளன.

இந்த ஆண்டு புதிய டிராக்டர், டிப்பர் மற்றும் சொகுசு பஸ் ஆகியவை அறிமுகம் செய்யப்படவுள் ளன. புதிய நவீன அலுவலகம் அமைக்கப்பட் டுள்ளது. பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து ஏற் படக்கூடிய போட்டியை சமாளிக்க இந்நிறுவனம் தயாராக உள்ளது.

நிறுவனம் தனது ஆதார பலத்தை வலுப் படுத்திக் கொள்வதன் மூலம் போட்டியைச் சமா ளிக்கும் என உறுதியாக நம்பப்படுகிறது.

உலக மயமாதல் பரவி வரும் நிலையில் போட்டி என்பது தவிர்க்க இயலாதது. இதனை நிறுவனம் நன்கு உணர்ந்திருப்பதாக அந்நிறு வனம் தெரிவித்துள்ளது. ✱

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org